விலை ரூபா: 15.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

பக்கங்கள்: பன்னிரண்டு — Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 ஆடி 06 புதன்கிழமை (22.07.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 215

SATS-TECH ENGINEERS (PVT) LTD
*0114562929, 0212228812, 0212225908*




1 Year Subcription free with All Tamil + All sports
Including Setmax, Pogo,Cartoon network BBC,CNN

## கப்பல் பயணிகள் பஸ்ஸில் பயணம்

# ஏ-9 பாதையின் ஊடாக இன்று பயணிகள் பஸ் சேவை

## அமைச்சர் டக்ளஸ் ஆரம்பித்து வைப்பார்

(யாழ்ப்பாணம்)

ஏ-9 பாதையூடாக யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கான பயணிகள் போக்குவரத்து சேவை இன்று காலை 10 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள் ளது. யாழ். துரையப்பா விளையாட்டரங்கிலிருந்து புறப்படவுள்ள இச் சேவையை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆரம்பித்து வைக்கவுள்ளார். இந்த பஸ் சேவையில், இன்று கப்பல் மூலம் பயணத்தை மேற்கொள்ள இருந்தோர் அழைத்துச் செல்லப்படவுள்ளனர். *(12ஆம் பக்கம் பார்க்க)*

## தீவுப் பகுதிக் கடலில் 4 சடலங்கள் மீட்பு

(ஊர்காவற்றுறை)

புங்குடுதீவு மற்றும் எழுவைதீவுக் கடற் கரைப் பகுதியில் கடந்த மூன்று தினங்களில் 4 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

புங்குடுதீவு கடற்கரைப்பகுதியில் கடந்த இரு தினங்களுக்கு முன்னர் மூன்று சடலங் கள் கரையொதுங்கின. இந்நிலையில் நேற் றும் மேலுமொரு சடலம் கரையொதுங்கியதாக ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை எழுவைதீவுக் கடற்கரையில் நேற்றுக்காலை ஒரு சடலமும் மாலை மற் றொரு சடலமும் *(12ஆம் பக்கம் பார்க்க)*

## யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற 5 இளைஞர்கள் கொழும்பில் கைது

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குச் சென்ற ஐந்து தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக இலங்கை மனித உரி மை ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள் ளது.

கொழும்பில் கடந்தவாரம் இடம்பெற்ற திடீர் தேடுதலில் இந்த ஐந்து இளைஞர்களும் கைது செய்யப்பட்டதாக உறவினர்கள் முறை யிட்டுள்ளனர்.

வெளிநாடு செல்லும் நோக்கில் கடந்த ஒரு வாரத்திற்கு முன்னரே இவர்கள் கொ ழும்பு வந்ததாகவும் கைது செய்யப்பட்ட மைக்கான காரணங்கள் எதுவும் பொலிஸாரி னால் தெரிவிக்கப்படவில்லை என்றும் உற வினர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளையில் *(12ஆம் பக்கம் பார்க்க)*

## யாழ்–கொழும்பு விமான சேவை கட்டணங்கள் இன்று முதல் குறைப்பு

(கொழும்பு)

யாழ்.-கொழும்பு விமான சேவைக்கட்ட ணங்கள் இன்று முதல் குறைக்கப்பட்டுள்ள தாக விமான சேவைகள் மற்றும் கப்பல் துறை அமைச்சு அறிவித்துள்ளது.

இதன் பிரகாரம் யாழ்.-கொழும்பு ஒரு வழி விமானக் கட்டணம் 10 ஆயிரத்து 750 ரூபா யிலிருந்து 10 ஆயிரத்து 250 ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் *(12ஆம் பக்கம் பார்க்க)*

## இலங்கைக்கு கடனுதவி வழங்க சர்வதேச நாணய நிதியம் இணக்கம்

### அமெரிக்காவின் போக்கிலும் தளர்வு

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியம் (ஐ.எம்.எப்) இலங்கைக்கு 2.5 பில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவி வழங்குவதற்கு ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

முன்னதாக 1.9 பில்லியன் அமெரிக்க டொலர் நிதியினை இலங்கை அரசு கேட்ட போது நாட்டில் நிலவிய யுத்த நெருக்கடியைக் கருத்தில் கொண்டு ஐ.எம்.எப் இக் கடனுத வியை வழங்க மறுத்துவிட்டது. இந்நிலை யில் தற்போது *(12ஆம் பக்கம் பார்க்க)*

**உள்ளே...**

✷ தமிழக ஜோதிடர் கலாமணி சிவல்புரி சிங்காரம் எழுதும் ஆடி மாதப்பலன்கள்.

## பசில் எம்.பியின் தலைமையில் இன்று வடக்கின் வசந்தம் மீளாய்வுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடக்கின் வசந்தம் மீளாய்வுக் கூட்டம் இன்று யாழ்.பொது நூலகத்தில் ஜனாதிபதி யின் சிரேஷ்ட ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பசில் ராஜபக்ஷ தலைமை யில் நடைபெறவுள்ளது.

இதில் சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ்.அரச அதிபர் க.கணேஷ், வடக்கு மாகாண பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி, வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் மற்றும் விளை யாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், *(12ஆம் பக்கம் பார்க்க)*

## யாழ்.போதனா வைத்தியசாலைக்கு சுகாதார அமைச்சர் விரைவில் வருவார்

### அபிவிருத்தி பணி குறித்தும் ஆராய்வார்

(கொழும்பு)

யாழ்.போதனா வைத்தியசாலையில் நில வும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து தீர்வு வழங்க சுகாதார சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா விரை வில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தருகிறார்.

இத்தகவலை மின்சக்தி அமைச்சர் மகிந் தானந்த அளுத்கமகே தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்.போதனா *(12ஆம் பக்கம் பார்க்க)*

Lifeline




சூரியன் அலைகளில் (யாழ்ப்பாணம் 93 Mhz)
சனிக்கிழமைகளில் காலை 6.00 மணி முதல் 8.00 மணி வரை
மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியினை நீங்கள் கேட்கலாம்

**உங்கள் கதைகளை கேளுங்கள்**

உள் நாட்டில் இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கான
மனிதாபிமான பணிகள் குறித்த தகவல்களை தாங்கி வருகின்றது
மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சி. இது உங்களுக்காக
உங்கள் கதைகளை சொல்லும் ஒரு நிகழ்ச்சி
தொடர்புகளுக்கு மீண்டும் வாழ்வோம் த.பெ.எண் 1039 கொழும்பு.



யாழ். பாதுகாப்பு படையினரின் ஏற்பாட்டில் கோப்பாய் நலன்புரி நிலையத்திலுள்ளோருக்கு உணவு மற்றும் பாடசாலை உபகரணங்கள் வழங்கும் வைபவம் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை வீரமணி ஐயர் கலை மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ். கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மெந்தக சமரசிங்க, 57 ஆவது இராணுவ தலைமையக அதிகாரி பிரிகேடியர் ஜெயசுந்தர, யாழ் மாவட்டத் தளபதி பிரிகேடியர் ருக்மால் டயஸ் ஆகியோர் உதவிப் பொருட்களை வழங்குவதையும் நலன்புரி முகாமிலுள்ளோரில் ஒரு தொகுதியினரையும் படங் களில்காணலாம். படங்கள்: ரி. சுதர்சன்

## கல்வியியல் முதுமாணிப்பரீட்சை யாழில்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தி னால் நடத்தப்படும் கல்வியியல் முதுமாணிக் கற்கை நெறிக்கான தெரிவுப்பரீட்சை எதிர் வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி தொடக்கம் 12 மணிவரை யாழ். பிராந்திய நிலையத்தில் நடைபெறவுள்ளதாக இணைப்பாளர் அறிவித்துள்ளார். இப் பரீட்சை கொழும்பில் நடத்தப்படவிருந்தமை குறிப் பிடத்தக்கது.

## போசாக்கு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் பிரதேச பொது சுகாதாரப் பரிசோதகரினால் யாழ்/ கோண்டாவில் இராம கிருஷ்ண ம.வித்தியாலய மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு இன்று புதன் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு 'வளரும்பருவப்பிள்ளைகளுக் கான போசாக்கு' எனும் தலைப்பில் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது. (ச–11)

## தமிழ் அலைகள் நூல் வெளியீட்டுவிழா

யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி தமிழ்ப் பேரவையின் தமிழ் அலைகள் நூல் வெளியீடு இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு கல்லூரி விவேகானந்தா மண்டபத் தில் தி. விணோத் தலைமையில் நடைபெறும். நிகழ்வில் போஷகராக அதிபர் நா.வன்னிய சிங்கமும் முதன்மை விருந்தினராக வைத்தீஸ்வராக் கல்லூரி முன்னாள் அதிபர் சிற்பி– சி. சரவண பவசர்மா, சிறப்பு விருந்தினராக முன்னாள் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே. விகுணசேகரம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச)


## யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம்

### பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம்–2009

இடம்:- யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம் சுப்பிரமணிய மண்டபம்

காலம்:- 05.08.2009

நேரம்:- காலை 9.00 மணி

மேற்படி கூட்டத்தில் ஆசிரியர்கள், அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் ஆகியோரைப் பங்குபற்றுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

★ பிரேரணைகள் ஏதும் இருப்பின் 29.07.2009 இற்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தலைவர்,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

செயலாளர்

(C-2882)


## புதிய நியமனங்களால் அதிருப்தி

# மூத்த இராணுவ அதிகாரிகள் திடீர் ஓய்வுக்குத் திட்டம் ?

(கொழும்பு)

புதிய இராணுவத் தளபதியை நியமிக்கும்போது சேவை மூப்பு எந்த வகையிலும் கவனத்திற் கொள்ளப்படாமையால் அதிருப்தி அடைந்திருக்கும் இராணுவ உயர் அதிகாரிகள் பலரும் தமது எதிர்ப்பை தெரிவிக்கும் முகமாக தமது சேவையில் இருந்து முன்கூட்டியே ஓய்வு பெறுவதற்குத் திட்டமிட்டிருப்பதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

படைத் தலைமைகளில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடந்த வாரத்தில் மேற்கொண்ட திடீர் மாற்றங்களினால் இராணுவ உயர் அதிகாரிகள் பலரும் பெரும் அதிருப்தியடைந் திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

கூட்டுத் தலைமை அதிகாரிப் பதவியைப் பொறுத்த வரையில் சேவையில் இருந்து ஓய்வு பெற்ற முப்படைகளின் தளபதிகளில் ஒருவரையே இதற்கு நியமிக்கும் வழமைதான் காணப்படுகின்றது. ஆனால் இப்போதுதான் முதல் தடவையாக இராணுவத் தளபதியாக இருந்த ஒருவர் அந்தப் பதவியில் இருந்து நீக்கப்பட்டு கூட்டுப்படைகளின் தலைமை அதிகாரியாக நியமிக்கப் பட்டி ருக்கின்றார்.

அதேவேளையில் சரத் பொன்சேகாவுக்கு அடுத்ததாக இராணுவத்தில் சேவை மூப்பின் அடிப்படையில் பத்தாவது நிலையிலேயே ஜகத் ஜய சூரிய இருந்துள்ளார். ஆனால் அவரை புதிய இராணுவ தளபதி யாகநியமித்திருப் பதன் மூலம் அவரை விட அதிக சேவையை கொண்டுள்ள இராணுவ அதிகாரிகள் பலரும் அதிருப்தியடைந்திருக்கின்றனர்.

மேஜர் ஜெனரல் ஆர்.எஸ். பால சூரியதான் சரத் பொன்சேகாவுக்கு அடுத்த நிலையில் இருந்ததாக கூறப்படுகின்றது.

இருந்த போதி லும் இராணுவ தலைமை அதிகாரிப் பதவியில் இருந்த ஜி.ஏ. சந்திரசிறியை தனக்கு அடுத்ததாக இராணுவத் தளபதிப் பதவிக்கு நியமிக்க வேண் டும் என்றே சரத்பொன்சேகா கேட்டிருந்ததாக தெரிகின்றது. சேவை மூப்பின் அடிப்படையில் அவரும் இரண்டாவது இடத்தில் உள்ளவர்.

வெறுமனே சேவை மூப்பின் அடிப்படையில் இல்லாமல் போர்க்கள அனுபவம், திறமை என்பவற்றையும் கவனத்திற் கொண்டே புதிய இராணுவத் தளபதியின் நியமனம் மேற் கொள்ளப்பட்டிருப்பதாக அரச தலைமை கூறினாலும் அந்த வகையிலும் ஜகத் ஜயசூரிய ஐந்தாவது இடத்திலேயே இருப்பதாக இராணுவ அதிருப்தியாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

மேஜர் ஜெனரல் பாலசூரிய, மேஜர் ஜெனரல் சந்திரசிறி, மேஜர் ஜெனரல் ரணசிங்க, மேஜர் ஜெனரல் பராக்கிரம பன்னிப்பிட்டிய ஆகியோர் போர்க்கள அனுபவத்திலும், சேவை மூப்பின் அடிப்படையிலும் ஜகத் ஜயசூரியவுக்கு முன்பாக இருப்பதாக சுட்டிக் காட்டப்படுகின்றது.

இருந்த போதிலும் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுடன் மிகவும் நெருக்கமானவராக ஜகத் ஜயசூரிய இருப்பதால்தான் அவருக்கு முன்பாக உள்ளவர்கள் புறக்கணிக்கப்பட்டு அவருக்கு இரா ணுவ தளபதிப் பதவி வழங்கப்பட்டிருப்பதாக இராணுவ அதிருப்தியாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

அரச தலைமை பாகுபாடாக நடந்து கொண்டிருப்பதாகக் குற்றம் சாட்டும் இந்த மூத்த இராணுவ அதிகாரிகளில் பலர் முன் கூட்டியே தமது சேவைகளில் இருந்து ஓய்வு பெறுவதற்கு திட்டமிட்டிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ச–5)


## மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.

### தங்குமிட வசதி

யாழ். மாவட்டத்திற்கு அரச அமைச்சுக்களின் அதி காரிகள், அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங் களின் அதிகாரிகள் இம் மாவட்ட அபிவிருத்திவேலைகள் சம்பந்தமான கலந்துரையாடல்களுக்குத் தற்போது கணிசமானளவு வந்து கொண்டிருக்கின்ற காரணத்தினால் அவர்களுக்குத் தங்குமிட வசதி ஏற்பாடு செய்யப்பட வேண்டியுள்ளது. எனவே தங்குமிட வசதிகளைத் தரக் கூடிய நிறுவனங்கள்/ தனியார் தயவு செய்து பின்வரும் விபரங்களை அறியத் தரு மாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

1. நிறுவனத்தின்/ தனியாரின் பெயர்
2. முகவரி
3. தொலைபேசி இலக்கம்
4. தங்குமிட வசதி வழங்கக்கூடிய குளிரூட்டியுள்ள, அற்ற அறைகளின் எண்ணிக்கை
5. உணவு பரிமாற இயலுமா? இல்லையா?
6. 24 மணிநேரத்திற்குரிய கட்டணம்.

ஆகிய விபரங்களைத் தயவு செய்து 021 222 2355 எனும் தொலைநகலுக்கு இயன்றளவு விரைவாக அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றார்கள்.

க. கணேஷ்,
அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலர்,
யாழ். மாவட்டம்

(C-2886)



## கரன் (f) பூட் சிற்றி

## KARAN FOOD CITY

(உடுப்பிட்டி)

### புதுக்கடைத் திறப்பு விழா

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான விரோதி வருடம் ஆடி மாதம் 7ம் நாள் (23.07.2009) வியாழக்கிழமை காலை 7.32 மணி முதல் 9.32 மணிவரையுள்ள சுபவேளையில் எம்மால் அமைக்கப்பட்ட

கரன் (f) பூட் சிற்றி

புதுக்கடைத் திறப்பு விழா செய்ய இருப்பதால் அத் தருணம் உங்கள் அனைவரையும் வந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் வரவை இனிதே விரும்பும்

உரிமையாளர்கள்
கரன் எலெக்ரிக்கல்ஸ்
T.P–060–221 6490

751, வல்வெட்டித்துறை வீதி,
நாவலடி, உடுப்பிட்டி.

[2998]

# இன்று ஒரு தகவல்

## ஆயுள் அதிகமாக

மனிதனின் ஆயுள் என்கிறோம். மனிதனின் வாழ்நாள் என்கிறோம். இவை இரண்டிற்கும் வித்தியாசம் உண்டு.

நோய் நொடி எதுவுமில்லாமல் இருந்தால் மனிதன் 80 வயதுக்கு மேலும் நல்லபடியாக வாழலாம்.

இது மனிதனுடைய வாழ்நாள்.

ஆனால் மனிதனுடைய ஆயுள் என்பது பரம்பரையைப் பொறுத்த விடயம்.

இந்த உலகத்தில் உள்ளவர்கள் இன்னும்ஒரு 10,15 வருடங்கள் கூடுதலாக வாழ ஏதாவது வழி உண்டா?

நவீன மருத்துவ ஆய்வுகள் இதற்கு 10 வழிகளைச் சொல்லியிருக்கிறது. அவை என்னவென்பதை இப்பொழுது பார்க்கலாம். முதலில் ஒரு நாளைக்கு ஒருவேளை உணவை முழுமையாக மனநிறைவுடன் சாப்பிடுங்கள்.

இரண்டாவது: தினமும் ஒரே மாதிரியான உணவு அல்லாமல் ஒவ்வொரு நாளும் வித்தியாசமான உணவுகளை சாப்பிட வேண்டும்.

பழம்–காய்கறிகள் அதிகமாக சாப்பிட வேண்டும்.

மூன்றாவது கருத்து: வாரத்துக்கு இரு தடவையாவது மீன் சாப்பிடுவது நல்லதாம். சைவ உணவுக்காரர்கள் இதைக்காதில் வாங்கிக் கொள்ள வேண்டாம்.

நான்காவது கருத்து: மது அருந்த வேண்டாம்.

ஐந்தாவது கருத்து: தினமும் ஒரு வேளையாவது பால் சாப்பிடுங்கள்.

ஆறாவது கருத்து: உடல் எப்பொழுதும் இயங்கிக் கொண்டிருக்கும் வகையில் ஏதாவது வேலை செய்து கொண்டே இருக்க வேண்டும். உடற்பயிற்சி நல்லது.

ஏழாவது கருத்து: தாகம் எடுக்கும் அளவுக்கு கடுமையான உடற்பயிற்சி வேண்டாம்.

எட்டாவது கருத்து: உணவில் அதிகமாக மாமிசக் கொழுப்புச் சத்து சேராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஒன்பதாவது கருத்து: வாரத்துக்கு 2 அல்லது 3 தடவைக்கு மேல் அசைவம் சாப்பிட வேண்டாம்.

பத்தாவது கருத்து: உடல் எடை அதிகரிக்காமல் பார்த்துக் கொள்ளவேண்டும். கோபம் மாதிரியான உணர்ச்சிகளுக்கு அடிக்கடி இடம் கொடுக்க வேண்டாம்.

இந்தப் பத்துக்கருத்துக்களும் மருத்துவ ஆராய்ச்சி மூலமாக கண்டுபிடிக்கப்பட்ட புதிய கருத்துக்கள். அதனால் இதை மனதில் வைத்துக்கொண்டு அதற்குத் தகுந்தாற் போல் நடந்து கொண்டால் வழக்கத்தை விட அதிகமாக ஒரு 10,15 ஆண்டுகள் இந்த உலகத்தில் வாழ முடியும் என்கிறார்கள் மருத்துவ நிபுணர்கள்.

நம்மில் பலருக்கு இந்த உலகத்தில் அதிகநாள் வாழ வேண்டும் என்பதை விட அதிக நாள் இளமையாக இருக்க வேண்டும் என்பது தான் ஆசை.

இரண்டு வயதானவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள்.

"வயதாக ஆக உடம்பின் பலம் குறைந்து போய் விடுகிறது சேர்... அது தான் கவலையாக இருக்கிறது" என்றார் ஒருவர்.

எனக்கு அப்படியில்லை சேர்... சின்ன வயதில் எனக்கு என்ன பலமோ அதேயளவு பலம் தான் இப்பொழுதும் இருக்கிறது" என்றார் மற்றவர்.

"அது எப்படி?" என்று ஆச்சரியமாக கேட்டார் அவர்.

"எங்கள் வீட்டில் ஒரு பெரிய அம்மிக்கல் உண்டு சேர். சின்ன வயதில் என்னால் அதைக் கொஞ்சம் கூட அசைக்க முடியாது... இப்பொழுதும் என்னால் அதைக் கொஞ்சம் கூட அசைக்கமுடியவில்லை" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# முதலாம் தர மாணவர் அனுமதிக்கு வாக்காளர் பட்டியல் பதிவு பரீசீலனை

(கொழும்பு)

வாக்காளர் பெயர் பட்டியலில் உத்தியோக பூர்வமாக பதிவு செய்யப்பட்ட விபரங்களில் பெயர்கள் இல்லாத பெற்றோர்களின் பிள்ளைகளை அந்த பிரதேச பாடசாலைகளில் முதலாம் தரத்திற்கு அனுமதிப்பதற்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படமாட்டார்கள் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

போலி ஆவணங்களை சமர்ப்பித்து பாடசாலைகளில் மாணவர்கள் சேர்வதை தடுக்கும் நோக்கிலேயே இந்த புதிய திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. விண்ணப்பங்களில் போலியான தகவல்களை உள்ளடக்கிய ஆவணங்களை சமர்பித்து பாடசாலைகளில் ஏற்கனவே இணைந்துள்ள மாணவர்கள் தொடர்பாக இரகசிய காவல் துறையினரின் ஊடாக விசாரணைகள் மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அடுத்த வருடத்திற்கான மாணவர்களை முதலாம் தரத்திற்கு உள் வாங்குவது தொடர்பான நேர்முக பரீட்சைகளை விடுமுறை நாட்களில் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்து.

இந்த நடவடிக்கைகளை எதிர் வரும் செப்ரெம்பர் மாதம்அளவில் நிறைவு செய்ய வேண்டும் என கல்வியமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-4)

# மே மாதம் வரை இலங்கைக்கு கிடைத்த மொத்தக்கடன் 40 கோடி 30 இலட்சம்

இந்த வருடம் மே மாதம் வரை இலங்கைக்கு கிடைத்த மொத்த வெளிநாட்டுக்கடன்களின் பெறுமதி 40 கோடி 30 இலட்சம் டொலரான ஆண்டின் நடுப்பகுதியில் வெளியிடப்படும் அரச நிதி நிலைமை பற்றிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த வருடம் இதே காலப்பகுதியில் 36 கோடி 80 இலட்சம் டொலர் வெளிநாட்டு கடன் கிடைத்தது.

உலகப் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இலங்கையின் அபிவிருத்தி செயற்திட்டங்களுக்கு இந்த கடன்கள் கிடைத்திருப்பதாக அந்த அறிக்கையில் மேலும் கூறப் பட்டுள்ளது.

இந்த அறிக்கையை அரசாங்க கட்சியின் பிரதம பேச்சாளர் அமைச்சர் டினேஸ் குணவர்த்தன நேற்று காலை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். வட்டி செலவீனம், சம்பளம், ஓய்வூதிய கொடுப்பனவு, உர மாணியம், அபிவிருத்தி செயற்திட்டம் என்பவற்றுக்கு கூடுதலான நிதி ஒதுக்கப்பட்டதால் அரச செலவீனம் 28 சதவீதத்தால் அதிகரித்திருப்பதாக அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ஓ-4)

# கொழும்பு ரயில் பாதைத் திருத்தப் பணிகள் இன்று ஆரம்பமாக உள்ளது


யாழ்ப்பாணம் - காங்கேசன் துறையில் இருந்து கொழும்புக்கான ரயில் பாதையைத் திருத்தும் பணிகள் இன்று புதன்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளது. இதற்கென சீனாவில் இருந்து பொறியியலாளர்கள் இங்கு வரவுள்ளனர்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட போக்குவரத்துத் துறை அமைச்சர் டலஸ் அழகப் பெரும இத் தகவலைத் தெரிவித் துள்ளார்.

யாழ்ப்பாணத்தின் போக்குவரத்து நிலைமையை நான் நன்கு அறிந்துள்ளேன். 1905 ஆம் ஆண்டு எப்படி முதன் முதலாக காங்கேசன் துறைக்கும் கொழும்புக்கும் இடையே ரயில் பாதை அமைக்கப்பட்டதோ அதே போன்று தற்போதும் காங்கேசன்துறையில் இருந்தும் வவுனியாவில் இருந்தும் ரயில் பாதை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் ரயில் நிலையம் ஜனாதிபதியின் சொந்த இடமான அம்பாந்தோட்டைப் பொது மக்களின் நிதி உதவி மற்றும் மனித சக்தியுடன் மீண்டும் நவீனமயப்படுத்தப்பட்ட ஒரு ரயில் நிலையமாக அமைக்கப்படவுள்ளது.

இதற்கு ஜனாதிபதி முழு மூச்சுடன் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார் எனவும் அவர் தெரிவித் துள்ளார். (ஓ-4)



யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கம் உலகக் கணனி வலைப்பின்னலில் இணையும் நிகழ்வின் போது சங்கத்தின் தலைவரும், கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியின் பிரதி அதிபருமான வி.கே. கணபதிப் பிள்ளை மங்கல விளக்கேற்றுவதையும், அருகில் கல்லூரி அதிபர் வி. மாணிக்கம், சங்க மூத்த உறுப்பினர் செ. ப.ஜீவானந்தம் ஆகியோர் நிற்பதைப் படத்தில் காணலாம்.

# இராசி பலன்

22.07.2009
(ஆடி 6, புதன்கிழமை)
அமாவாசை முற்பகல் 9.12 மணிவரை
புனர்பூசம் காலை 6.03 மணிவரை
பூசம் பின்னிரவு 4.26 மணிவரை
இராகுகாலம் 12.01-1.31 மணிவரை
சுபநேரம் 4.31-6.01 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | அதிக பிரயாசை, பயந்த சுபாவம், சுபசெலவு, உறவினர் சந்திப்பு. |
| இடபம் | இனிய சம்பவம், வாக்கு மேன்மை, பணவருவாய், தொழில் நன்மை. |
| மிதுனம் | வேலைச்சுமை, வீண் வார்த்தை, குடும்பக் கவலை, கடின முயற்சி. |
| கடகம் | பெரியோர் சந்திப்பு, சயன சுகம், தொழில் சிந்தை, நல்ல முயற்சி. |
| சிங்கம் | பிதா சிந்தை, உணர்ச்சி வசப் படல், பயணம், காரியதாமதம். |
| கன்னி | தடைப்பட்ட காரியம் கைகூடும், கீர்த்தி, பொருள் வருவாய், மனமகிழ்ச்சி. |
| துலாம் | சுப நிகழ்வு, தூரதேசச் செய்தி, ஆரோக்கியம், காரிய அனுகூலம். |
| விருச்சிகம் | ஆன்றோரால் மதிக்கப்படுதல், புதிய திட்டமிடல், வீண்பயம், பிதாசிந்தை. |
| தனுசு | ஆரோக்கியக்குறைவு, போசன சுகம், முயற்சி தாமதம், வீண் பகை. |
| மகரம் | திடீர் பயணம், களஸ்திர நன்மை, காரிய அனுகூலம், போசன சுகம். |
| கும்பம் | சுகவாழ்வு, சத்துரு ஜெயம், முயற்சி கைகூடும், திடீர் பயணம். |
| மீனம் | காரிய இடையூறு, மரியாதைக் குறைவு, தனவிரயம், வியாபார விருத்தி. |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 55 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 130 |
| பச்சைமிளகாய் | 50 | 60 | 60 |
| தக்காளி | 160 | 180 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 70 |
| கோவா | 100 | 120 | -- |
| கரட் | 100 | 120 | 80 |
| பூசணி | 40 | 60 | 30 |
| புடோல் | 40 | 60 | 25 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 50 | 60 | 50 |
| பெரிய வெங்காயம் | 80 | 90 | 80 |
| பாகற்காய் | 120 | 140 | 90 |
| வெண்டிக்காய் | 30 | 45 | 30 |
| கரணைக் கிழங்கு | 60 | 80 | -- |
| பயிற்றங்காய் | 120 | 140 | 80 |
| லீக்ஸ் | 60 | 80 | 100 |
| பீற்றூட் | 40 | 60 | 50 |
| கறிமிளகாய் | 40 | 60 | 60 |
| முருங்கைக்காய் | 200 | 250 | 200 |
| போஞ்சி | 300 | 320 | -- |
| கீரை - 1 பிடி | 30 | 30 | 15 |
| தேசிக்காய் | 50 | 60 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 25 | 30-35 | 30 |








நல்லூர் லயன்ஸ் கழகத்தின் 2009/2010 ஆம் ஆண்டுக்கான பதவியேற்பு வைபவம் அண்மையில் யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்ற போது புதிய தலைவராக பதவியேற்றுக் கொண்ட லயன் பி.கே.பி. பாலசங்கர் உரையாற்றுவதையும், நிகழ்வில் பிரதம விருந்தினரும் முன்னாள் தலைவருமான லயன் எஸ். ராகவன் பாடசாலை மாணவர் ஒருவருக்கு மூக்குக்கண்ணாடி வழங்குவதையும், புதிய உறுப்பினர்கள் பதவியேற்பதையும் படங்களில் காணலாம்.

## திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தென்மேற்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் சண்டிலிப்பாய் பாற் பொருட்கள் உற்பத்தி நிலையத் திறப்பு விழா இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு தி. ராஜ்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சிவலிங்கம், கால் நடை உதவிப் பணிப்பாளர் திருமதி வ. அமிர்தலிங்கம் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் உதவி பிரதேச செயலர் எழிலரசி அன்ரன் யோகநாயகம், லான்ட் ஓ லேக் இணைப்பாளர் என். இராஜகுரு, சண்டிலிப்பாய் கால் நடை வைத்திய அதிகாரி க. மீனயோகினி, உடுவில் கால் நடை வைத்திய அதிகாரி லோகமரியதாஸ் ஆகியோரும் கலந்து கொள்ள உள்ளனர். இதில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தலைவர், பணியாளர்கள் கேட்டுக் கொள்கின்றனர். (இ)

## பல்கலைக்கழக அனுமதிக்கு தெரிவானோர் உரிய காலத்தில் பதிவுகளை மேற்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்திற்கு 2008/2009 ஆம் கல்வியாண்டில் அனுமதி பெறவுள்ள மாணவர்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அனுப்பி வைக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து அதில் குறிப்பிடப்பட்ட ஆவணங்களுடன் குறிக்கப்பட்ட திகதிக்கு முன்னதாக யாழ். பல்கலைக்கழக அனுமதிகள் கிளையில் பதிவுகளை மேற்கொள்வதுடன், யாழ்ப்பாணம் தவிர்ந்த வெளி மாவட்ட மாணவர்கள் தபால்மூலம் பதிவு செய்ய விரும்பினால் 021 222 6714 என்ற தொலைபேசி எண் மூலம் உதவிப் பதிவாளர் அனுமதிகள் கிளையுடன் தொடர்பு கொள்ளுமாறு பதிவாளர் தெரிவித்துள்ளார். (ஓ-7)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

அல்வாய் வேல்விலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் உற்சவம் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் ஆகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு இரதோற்சவமும், மறுநாள் புதன்கிழமை காலை 6 மணிக்கு சமுத்திர தீர்த்தமும் இடம்பெறவுள்ளது. (ஓ-4-10)

## போதைப் பொருள் ஒழிப்பு, புகைத்தல் தவிர்ப்பு தொடர்பான செயலமர்வு இன்று

(யாழ்ப்பாணம்)

போரூட் நிறுவனத்தின் ஏற்பாட்டில் மக்களிடையே போதைப்பொருள் பழக்க வழக்கங்களை கட்டுப்படுத்தவும் புகைத்தலை தவிர்ப்பதற்குமான விழிப்புணர்வு முழுநாள் செயலமர்வு இன்று புதன்கிழமை யாழ். பண்ணை மார்பு நோய் சிகிச்சை நிலைய கருத்தரங்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

போரூட் விரிவுரைகளை யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட விரிவுரையாளர்கள், யாழ். பிராந்திய சுகாதாரப் பணிமனை அதிகாரிகள் வழங்கவுள்ளனர்.

நிகழ்வில் ஊடகவியலாளர்கள், சமூக சேவையாளர்கள், அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் என இருபது பேர் பங்குபற்றவுள்ளனர்.

இதேவேளையில் இன்று மாலை சிறுவர் உரிமைகள் சமூகத்தால் மதிக்கப்படுவது பற்றிய ஆய்வு குறித்த ஊடகவியலாளர்கள் சந்திப்பு சிறுவர் நிதிய யாழ் பிராந்திய அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது. (ஓ-134)

## ஆடிப்பூரவிழா

(சாவகச்சேரி)

நுணாவில் கல்வயல் விளைவேலி துர்க்கை அம்மன் ஆலய ஆடிப்பூரவிழா எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு அஸ்ரோத்திர 108 சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

அன்று பி.ப. 3 மணிக்கு பெண்கள் பங்கு கொள்ளும் திருவிளக்குப் பூசையும் இடம்பெறவுள்ளதாக ஆலய தர்மகர்த்தா தெரிவித்துள்ளார். (ஓ-29)




## வரவேற்பு விழாவும் சின்னஞ்சூட்டு வைபவமும்

(வண்ணார் பண்ணை)

கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தில் இன்று புதன்கிழமை காலை 9.00 மணிக்கு நல்லூர் கல்விக் கோட்டத்தின் புதிய கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராஜா அவர்களை வரவேற்கும் நிகழ்வும் மாணவத் தலைவர்களுக்கான சின்னஞ்சூட்டு வைபவமும் அதிபர் ச.வாமதேவன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஓ-11)

## கைதடி நவீல்ட் பாடசாலையில் திரைச்சீலை நீக்கல் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். தேசிய கல்வியியற் கல் லூரியின் உள்ளகப்பயிற்சி ஆசி ரியரான பாலசிங்கம் மதனரூபனின் தயாரிப்பின் கீழ் பாடசாலை அதிபர் வி. எஸ். மகேந்திரன் தலைமையில் நவீல்ட் பாடசாலையில் திரைச்சீலை நீக்கும் விழா இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தி னராக யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் உபபீடாதிபதி திருமதி ஜே. தியாகலிங்கம் இந் நிகழ்விற்கு அனுசரணை வழங்கிய டயஸ் டிலாசால் ஆகியோர் கலந்து சிறப்பிக்க உள்ளார்கள். (இ)

## குருபூசை

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் வேதாந்த மடத்தில் இன்று புதன்கிழமை மடத்தின் ஏழாவது பீடாதிபதியான ஸ்ரீமத் சோமாஸ்கந்தவேள் சுவாமிகளின் மூன்றாவது குருபூசை நடைபெறவுள்ளது.

இதில் காலை 10 மணியளவில் பண்ணிசையைத் தொடர்ந்து விஷேஷ அபிஷேக ஆராதனைகள் இடம்பெறவுள்ளது. (இ)

## பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

(ஊர்காவற்றுறை)

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 28 ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு உதவி அரச அதிபர் பணிமனையின் மகாநாட்டு மண்டபத்தில் உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெறவுள்ளது.

விவசாயத்திணைக்கள அதிகாரிகள், இ.போ.ச தீவக பஸ் பொறுப்பதிகாரிகள், தனியார் சிற்றூர்திச் சங்கப் பொறுப்பதிகாரிகள், கடல்வள தொழிற்சங்கங்கள் அனைவரும் பங்கு கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ஓ-72)

## புனித செபமாலை அன்னை யாத்திரைத்தல பெருவிழா

(ஊர்காவற்றுறை)

சின்னமடு புனித செபமாலை அன்னை யாத்திரைத்தல வருடாந்த திருவிழா எதிர்வரும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 3.45 மணிக்கு கொடியேற்றத்துடனும் செபமாலையுடனும் பங்குத்தந்தை அருட்பணியாளர் யே.அ. அருள்தாசன் அடிகளார் தலைமையில் ஆரம்பமாகி தினமும் மாலையில் நடைபெறும்.

எதிர்வரும் ஆகஸ்ட் 4 ஆம்திகதி செவ்வாய்க்கிழமை நற்கருணை விழாவும் மறுநாள் 5 ஆம்திகதி புதன்கிழமை காலை ஆயர் தலைமையில் திருநாள் திருப்பலியும் நடைபெற்று திருவிழா நிறைவு பெறுகின்றது. (ஓ-72)

## புனித பேதுருவானவர் பெருவிழா

உயர் பாதுகாப்பு வலயத்திலே அமைந்துள்ள மண்டைதீவுப் பங்கின் பாதுகாவலர் புனித பேதுருவானவரின் பெருவிழா ஆவணி முதலாம் நாள் புத்துணர்வுடன் கொண்டாடப்படவுள்ளது.

கிறிஸ்துவில் புதிய வாழ்வை கட்டியெழுப்புவோம் எனும் கருப்பொருளிலே நவநாட்கால வழிபாடுகள் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றன. இதில் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பங்கின் சிறார்களுக்கு முதல்நன்மையும் வழங்கப்படவுள்ளது.

கடைசி இரு நாட்களுக்குமான வழிபாடுகளில் இறை மக்கள் கலந்து கொள்ள வசதியாக இ.போ.ச பஸ்சேவை கடற்படையினரின் அனுசரணையுடன் இடம் பெறவுள்ளது.

திருநாட் திருப்பலி காலை 7.30 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகும். புனிதரின் ஆசீரைப் பெற இறைமக்களை பங்குத் தந்தையும் பங்கு மக்களும் அன்புடன் அழைக்கின்றனர். (ஓ-4)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டசெயலக நலன் புரிக் கழகத்தின் 'உளநலம்' பிரச்சனைகளும் எதிர்கொள்ளலும் தொடர்பான கருத்தரங்கு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு செயலக மகாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் வைத்திய நிபுணர் டாக்டர் எஸ்.சிவயோகன் கருத்துரை வழங்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஓ-30)


அம்மா பகவான் சரணம்

SUVASAKA MEDICALS



ஷென்மென் அக்கு பஞ்சர் வைத்தியசாலை

பாரிசவாதம் உட்பட சகல விதமான வாதங்கள், சலரோகம், Alcer, அஜீரணக் கோளாறுகள், நரம்புத் தளர்ச்சி, உடற்பருமன் கூட்டுதல், குறைத்தல், ஆஸ்துமா, சிறுபிள்ளைகளின் மூளை வளர்ச்சி இன்மை போன்ற எவ்வகையான புதிய அல்லது நாட்பட்ட நோய்களுக்கு எம்மிடம் நிவாரணம் உண்டு.

(வீட்டு அழைப்புக்களும் மேற்கொள்ளப்படும்)

தொடர்பு
(Acu) Dr.R.Sankar
295 ,ஆலடிச் சந்தி ,
பலாலி வீதி,
திருநெல்வேலி.
(சாரங்கன் பூஞ்சோலை கட்டடத் தொகுதி)
தொ.பே. 0779485703
(2939)

# புத்தாண்டில் உங்கள் ஆடி மாதப் பலன்கள்

## கும்பம்

**(அவிட்டம் 3, 4ஆம் பாதங்கள் சதயம், பூரட்டாதி 1, 2, 3ஆம் பாதங்கள் வரை)**

**நண்பர்களுக்கு நல்ல காரியங்களை செய்து கொடுக்கும் கும்பராசி நேயர்களே!**

ஆடி மாதக்கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது ஜென்ம குருவின் ஆதிக்கம் மாதத்தின் முற்பகுதியில் இருப்பதால் இனம் புரியாத கவலை மேலோங்கும். எதையும் ஒரு முறைக்கு இரு முறை செய்யும் அமைப்பு உருவாகும். குடும்பத்தில் சுமை கூடும். கொடுக்கல் வாங்கல்களில் நிதானத்தைக் டைப் பிடிப்பது நல்லது.

ஆறாமிடத்தில் சூரியனும் புதனும் கேதுவும் இணைந்திருக்கிறார்கள். எனவே உத்தியோகத்தில் மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்வதன்மூலம் ஆதாயங்களை அடைய முடியும். கல்விக்காகவும் கடல் தாண்டும் முயற்சிக்காகவும் காத்திருப்பவர்கள் சுய ஜாதகத்தில் தெசாபுத்திப் பலன் அறிந்து செயல்ப்படுவது நல்லது. கண்டச் சனியின் ஆதிக்கம் நடைபெறுவதால் ஒரு நாள் சுறுசுறுப்பும் மறுநாள் சோம்பலும் தலை தூக்கும். மருத்துவச் செலவுகள் தவிர்க்க முடியாததாகும்.

பெற்றோர்களின் உடல் நலத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. பிரச்சனைகளிலிருந்து விடுபட சனி பகவானிற்கு எள் தீபம் ஏற்றுங்கள். கறுப்பு வஸ்திரம் அணிவித்தால் இருப்பு உயரும். இன்னும் சில மாதங்களில் அட்டமத்துச் சனி வரப்போவதால் அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம். 12 இற்கு அதிபதி 8 இல் சஞ்சரிக்கும் நேரம் பலவித நன்மைகளையும் வாரி வழங்கலாம்.

சனிகவசத்தை சந்நிதியில் பாடி வழிபட்டால் இனிக்கும் காரியங்கள் ஏராளமாக நடைபெறும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

ஜூலை 26- திகதி மிதுன ராசியில் சுக்கிரன் சஞ்சரிக்கப்போகிறார். 4 க்கு அதிபதியும் 9க்கு அதிபதியுமான சுக்கிரன் பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது பணப்புழக்கம் அதிகரிக்கும். நீண்ட நாள் ஆசை நிறைவேறும். தொழில் நலம் பெருகும். பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய செய்திகள் வந்து சேரும்.

ஜுலை 27 ஆம் திகதி சிம்ம ராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். இதன் விளைவாக பயணங்கள் அதிகரிக்கும். பக்கபலமாக இருப்பவர்களின் எண்ணிக்கை கூடும் . அந்நிய தேசத்தில் இருந்து வரும் தகவல் ஆச்சரியப்படவைக்கும். புண்ணிய காரியங்களுக்கு கொடுத்து உதவுவீர்கள். பது முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

ஆகஸ்ட் 3 ஆம் திகதி மகரராசியில் குரு நீசம் பெற்றும் வக்கிரம் பெற்றும் சஞ்சரிக்கப் போகிறார். 2, 11 க்கு அதிபதி வக்கிரம் பெறும் பொழுது வருமானத்தில் தடைகள் ஏற்படும். வரவு ஒரு மடங்கு ஆனால் செலவு இருமடங்காகும். இக்காலத்தில் வங்கிக் கடனுதவிகளைப்பெற முயற்சித்தவர்களுக்கு உதவி கிடைக்கும். ஆராக்கியத்தில் நோய்க்கான அறிகுறி தெரியும் பொழுதே கவனித்துக் கொள்வது நல்லது. இக்காலத்தில் தென்முகக் கடவுள் வழிபாடு நன்மைகளை வழங்கும்.

ஆகஸ்ட் 16- ஆம்திகதி மிதுன ராசியில் செவ்வாய் ச்ஞ்சரிக்கப்போகிறார். 3 க்கு அதிபதி 5- இல் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் முன்னேற்றங்கள் அதிகரிக்கும். வழக்குகளிலிருந்து விடுபடுவீர்கள். உடன் பிறப்புக்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். பூர்வீக சொத்துப் பிரச்சனை அகலும்.

இம்மாதம் எதிர்பார்த்த காரியங்கள் இனிதே நடைபெற விநாயகப் பெருமானை வழிபட்டு வருவது நல்லது.

## மீனம்

**(பூரட்டாதி 4 ஆம் பாதம் ,உத்த ரட்டாதி, ரேவதி வரை)**

**அமைதியான பேச்சால் அனைவரையும் கவர்ந்திழுக்கும் மீனராசி நேயர்களே!**

ஆடி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது ராசி நாதன் குரு 12 இல் சஞ்சரித்தாலும் தனஸ்தானத்தில் சந்திரன் சஞ்சரிப்பது யோகம் தான். பணப்புழக்கம் அதிகரிக்கும். தொழில் வளம் மேலோங்கும். உங்களின் முன்னேற்றம் கண்டு எதிரிகளே ஆச்சரியப்படுவர். பிள்ளைகள் வழியில் பெருமைகள் வந்து சேரும்.

மாத தொடக்கத்தில் செவ்வாய் , சுக்கிர சேர்க்கை இருப்பதால் உடன் பிறப்புக்களின் இல்லத்தில் நடைபெறும் சுப காரியங்களை முன்னின்று நடத்தி வைப்பீர்கள். உங்கள் இல்லங்களிலும் திருமண வாய்ப்புகள் உருவாகலாம். சனி வக்கிர நிவர்த்தியானதால் உத்தியோகத்தில் வேலைப்பளு கூடும். சாப்பிடக் கூட நேரம் இல்லாமல் வேலை பார்க்கிறீர்களே என்று உங்களைச் சார்ந்தவர்கள் செல்லுவர்.

ஜென்ம குரு விலகும் வரை எந்தப்பிரச்சினையும் ஏற்படாது. செல்வ நிலை மேலோங்கும். சமூகத்தில் மதிப்பும் மரியாதையும் உயரும். குடும்பத்தில் நடைபெறும் பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது. சனிக்கிழமை தோறும் அனுமன் வழி பாட்டை மேற்கொள்வதன் மூலமும், சந்திரன் நிறைந்த நாளில் மலை வலம் வருவதன் மூலமும் மகத்தான பலன்களை நீங்கள் காண முடியும்.




3, 8இக்கு அதிபதியான சுக்கிரன் மாத தொடக்கத்தில் சகோதார காரகன் செவ்வாயுடன் இணைந்து செயல்படுகிறார். யூலை 26 ஆம் திகதி மிதுனராசிக்குப் பெயர்ச்சியாகிறார். இதனால் வாங்கிய சொத்துக்களை விற்க முயற்சிப்பவர்களுக்கு இரு மடங்காக இலாபம் கிடைக்கும். வங்கிச் சேமிப்பு உயரும். வட்டி கட்டி கவலைப்பட்டவர்கள் இனி மூலதனத்தை முன்னால் வைத்து அழகு பார்ப்பர். புதிய தொழில் தொடங்கும் திட்டம் நிறைவேறும். 4, 7இற்கு அதிபதியான புதன் யூலை 27ஆம் திகதி 6ஆம் இடத்தில் சஞ்சரிக்கப்போகிறார். எனவே கேந்திராதிபத்தியதோசம் பெற்ற கிரகம் யோகம் செய்யத் தொடங்கும். இதன் விளைவாக பெற்றோர் வழியில் பிரியம் கூடும். உங்கள் தொழிலுக்கு இவர்கள் உறுதுணையாக இருப்பர்.

வாங்கிய இடத்தை விற்று விட்டு அந்த மூலதனத்தைக் கொண்டு புதிய தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். நன்றி மறவாத குணம் உங்களிடம் இருப்பதால் நல்லவர்களின் தொடர்பால் நலம் காண்பீர்கள்.

ஆகஸ்ட் 3 ஆம் திகதி மகர ராசியில் குரு சஞ்சரிக்கப்போகிறார். ராசி நாதன் நீசம் பெறும் போது உடல் ஆரோக்கியத்தில் அக்கறை காட்டவேண்டிய சூழ்நிலை உருவாகும். ஊர் மாற்றம் , வீடு மாற்றம், இடமாற்றங்களை ஒரு சிலர் சந்திப்பர். வாகன மாற்றம் செய்வதன் மூலம் விபத்துக்களில் இருந்து தப்பிக்க இயலும். உத்தியோகஸ்தர்கள் நீண்ட தூரம் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலை அமையும் என்பதால் சுய ஜதாக ரீதியாக தொசாபுத்திக்கேற்ற தெய்வ வழிபாடுகளைச் செய்தால் நினைத்த இடத்திற்கு மாறுதல் கிடைக்கலாம்.

ஆகஸ்ட் 16ஆம் திகதி மிதுன செவ்வாயின் சஞ்சாரத்தால் சொத்துக்கள் வாங்கும் சூழ்நிலை உருவாகும். உடன் பிறப்புகள் உங்கள் கடன் சுமையை குறைக்க முன் வருவர். வழக்கில் வெற்றி கிட்டும். இம் மாதம் முருகப் பெருமானை வழிபட்டால் முன்னேற்றம் வந்து சேரும். (முற்றும்)

**சிவல்புரி சிங்காரம்**



நல்லூர் கலாசாரப் பேரவையினால் நல்லை ஆதீன கலா மண்டபத்தில் நடத்தப்பெற்ற "கலைஞானம்" நூல் வெளியீட்டு விழாவில் நல்லை ஆதீன முதல்வர் மங்கல விளக்கேற்றுவதையும், நல்லூர் பிரதேச செயலர் ப. செந்தில்நந்தனன் தலைமையுரைய றுவதையும், நூலினை செங்கை ஆழியான் கலாநிதி ஆர். குணராசா வெளியிட்டு வைப்பதையும், செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் மதிப்புரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

ஆப்கானிஸ்தானில்

# பிரிட்டன் போர் விமானம் விழுந்து நொருங்கியதில் இரு பைலட்டுகள் காயம்

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் பிரிட்டன் நாட்டின் போர் விமானம் விழுந்து நொருங்கியதில் இரண்டு பைலட்டுகள் காயமடைந்தனர்.

ஆப்கானிஸ்தானில் தலிபான் ஆட்சியை விரட்டிய பிறகு அமெரிக்கா மற்றும் நேட்டோ படைகள் அமைதி மற்றும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுவருகின்றன.

தலிபான்களின் கோட்டையான கந்தகாரில் தங்கியுள்ள வெளி நாட்டுப் படைகளின் மீது தலிபான்கள் அடிக்கடி கொலில்லா தாக்குதலை நடத்தி வருகின்றனர். கந்தகாரில் உள்ள விமானப்படை தளத்தில் பிரிட்டன் நாட்டின் அதி நவீன போர் விமானம் திடீரென விபத் துக்குள்ளானது .

இந்த விபத்தில் பைலட்டுகள் இருவரும் பலத்த காயமடைந்தனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை இதே மாகாணத்தில் ஹெலிகாப்டர் விபத்துக்குள்ளானதில் 16 பேர் பலியாயினர்.

கடந்த 18ஆம் திகதி அமெரிக்க போர் விமானம் விபத்துக்குள்ளானதில் இரண்டு பைலட்டுகள் பலியாயினர். (ஓ-4)

# விண்வெளி வீரர்களை செவ்வாய்க்கு அனுப்புவதற்கு வலியுறுத்தல்

(நியூயோர்க்)

40 வருடங்களுக்கு முன் சந்திரனில் முதன் முதலில் தரையிறங்கிய சாதனை நடவடிக்கையில் பங்கேற்ற இரு விண்வெளி வீரர்கள் மனிதனை செவ்வாய்க்கு அனுப்புவதற்கான முயற்சியை முன்னெடுக்க வலியுறுத்தினர்.

அப்பலோ - 11 விண்கலத்தில் சந்திரனுக்கு பயணித்த விண்வெளிவீரர்கள் குழுவைச் சேர்ந்த பஸ் அல்ட்றின் மற்றும் மைக்கேல் கொலின்ஸ் ஆகியோரே இவ்வாறு வலியுறுத்தியுள்ளனர்.

சந்திரனில் முதன் முதலாக காலடி வைத்தவர் என்ற பெருமையைப் பெறும் நிலாம் ஆர்ம்ஸ் ரோங்குடன் வாஷிங்டனில் தேசிய விண்வெளி அருங்காட்சியகத்தில் இடம் பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.


ஆர்ம்ஸ்ரோங்குடன் அல்ட்றின் சந்திரனில் நடந்த வேளை கொலின்ஸ் விண்கலத்தில் சந்திரனை சுற்றி வலம் வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ-4)






தென்னாபிரிக்க முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா தனது 91ஆவது பிறந்த நாளை ஜொஹன்னஸ் பேர்க்கில் கடந்த சனிக்கிழமை கொண்டாடினார்.


அவரின் அருகில் அவரது மனைவி கிரேகாமாசல் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம்.



பிரான்ஸ் முதல் பெண்மணி கார்லா புரூணி தென்னாபிரிக்கா முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் பிறந்த தினத்தை ஒட்டி பிரான்ஸில் ரேடியோ சிற்றி மிசுசிக் மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் பாடிய பின் கையசைப்பதை படத்தில் காணலாம்.

# 9 வயதில் 324 இறாத்தல் எடை கொண்ட 'மாமிச மலை' சிறுவன்

9 வயதில் 324 இறாத்தல் நிறையுடன் வலம் வந்து ரஷ்ய சிறுவன் ஒருவன் காண்பவர்களை விழி பிதுங்க வைத்துக் கொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.



*மாமிச மலை*சிறுவன் என செல்லமாக அழைக்கப்படும் தஸம்பிக் காதோகோவ் என்ற இச் சிறுவன் உலகிலேயே மிகவும் பருமனான சிறுவனாக கருதப்படுகிறான்.

இந்த சிறுவனது நிறை அவனது வகுப்பு நண்பர்கள் நால்வரின் மொத்த நிறையை விட அதிகமாக உள்ளது.

மேற்படி சிறுவனின் அளவுக்கு அதிகமான உடல் நிறையானது அச்சிறுவனது உயிருக்கு அபாயம் விளைவிக்கக் கூடியது என மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர்.

தனது மகனின் அதி கூடிய நிறை தொடர்பில் தஸம்பிக்கின் தாயான நெல்யா (42 வயது) விபரிக்கையில்,

"கடவுள் எனது மகனை இவ்வாறு படைத்துள்ளார். என்னால் என்ன செய்ய முடியும்?" என்று வினவினார்.



தாயுடன் தஸம்பிக்


தென் ரஷ்யாவில் நல்சிக் எனும் இடத்தில் வாழும் தஸம்பிக் தனது உடல் நிறை குறித்து விபரிக்கையில், "நான் இவ்வாறு இருப்பது எனக்கு பிடிக்கிறது'' என்று கூறினான்.

எதிர்காலத்தில் ஒலிம்பிக் போட்டியில் மல்யுத்த விளையாட்டில் ரஷ்யா சார்பில் கலந்து கொண்டு தங்கப் பதக்கம் வெல்வதே தனது இலட்சியம் என தஸாம்பிக் தன்னம்பிக்கையுடன் தெரிவித் தான்.

பிறக்கும் போது வழமையான எடையுடன் பிறந்த தஸம்பிக், வளர வளர பருமனான ஒருவனாக மாறியதாகக் கூறப்படுகிறது. (ஓ-4)

# உலகப் பிரபல எழுத்தாளர் பிராங் மக்கோர்ட் மரணம்

உலகப் பிரபல எழுத்தாளர் பிராங் மக்கோர்ட் தனது 78 ஆவது வயதில் புற்று நோய் காரணமாக மரணமானார்.



அமெரிக்கப் பிரஜை யான இந்த எழுத்தாளர் நீண்ட நாளாக தோல் புற்று நோயால் அவதிப்பட்ட நிலையில் நியூயோர்க் மருத்துவமனையொன்றில்உயிரிழந்துள்ளார்.

அயர்லாந்தி லான தனது சிறுபராய வாழ்க்கையை அடிப் படையாக வைத்து அவ ரால் எழுதப்பட்ட அஞ்சலாஸ் ஆஷ்ஸஸ் நாவலானது பல மில்லியன் பிரதிகள் விற்று விற்பனையில் சாதனை படைத்ததுடன் கௌரவ புலிட்ஸர் விருதையும் வென்றெடுத்தது.

இவர் 1996 ஆம் ஆண்டு மேற்படி புத்தகத்தை வெளியிடுவதற்கு முன் நியூயோர்க்கிலுள்ள உயர் பாடசாலையொன்றில் 30 வருட காலம் ஆசிரியராக பணியாற்றினார்.

நியூயோர்க்கில் பிறந்த பிராங் மக்கோர்ட் தனது இளமைக் காலத்தில் தனது பெற்றோருடன் ஏற்பட்ட முரண்பாட்டையடுத்து அயர்லாந்து சென்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ-4)

கனடாவில்

# பாரிய இரு காட்டுத் தீயினால் 17 ஆயிரம் பேர் இடம் பெயர்வு

மேற்கு கனடாவில் ஏற்பட்டுள்ள இரு பாரிய காட்டுத் தீ சம்பவங்கள் காரணமாக சுமார் 17 ஆயிரம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

இதில் ஒரு காட்டுத் தீயானது பிரிட்டிஷ் கொலம்பியாவிலுள்ள கெலோவா எனும் இடத்திற்கு அண்மையில் ஏற்பட்டுள்ளது.

இக் காட்டுத் தீயில் 300 ஹெக்ரெயர் நிலப் பரப்பு எரிந்து நாசமாகியுள்ளது.

இரண்டாவது காட்டுத் தீ ஆனது முதலா வது காட்டுத்தீ ஏற்பட்ட பிராந்தியத்துக்கு 10 கிலோ மீற்றர் தூரத்தில் ஏற்பட்டுள்ளது. இக்காட்டுத் தீயால் இதுவரை 100 ஹெக்ரெயர் நிலப் பரப்பு எரிந்துள்ளது.

இக்காட்டுத் தீ ஏற்பட்டமைக்கான காரணம் கண்டறியப்படவில்லை.

இக் காட்டுத் தீயை அணைக்கும் நடவடிக்கையில் 8 விமானங்கள் மற்றும் 10 உலங்கு வானூர்திகள் சகிதம் பெருந்தொகையான தீயணைப்பு படை வீரர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இதே பிராந்தியத்தில் 2003 ஆம் ஆண்டு ஏற்பட்ட காட்டுத் தீயால் 240க்கும் மேற்பட்ட வீடுகள் எரிந்து நாசமாகியமை குறிப்பிடத்தக்கது. (ஓ-4)

# உலக வயோதிபர்கள் தொகை 2040 ஆம் ஆண்டில் 1.3.பில்லியன்

## அமெரிக்க குடிசன மதிப்பீட்டுப் பணிமனை தெரிவிப்பு

உலகில் வயோதிபர்களின் தொகையானது என்றுமில்லாதவாறு அதிகரித்து வருகிறது எனவும் விரைவில் வயோதிபர் தொகை சிறுவர்கள் தொகையை முதல் தடவையாக விஞ்சவுள்ளதாகவும் அமெரிக்க குடிசன மதிப்பீட்டு பணிமனையால் திங்கட்கிழமை வெளியிடப்பட்ட ஆய்வு முடிபுகள் கூறுகின்றன.

கடந்த ஆண்டு மத்தியில் 506 மில்லியனாக இருந்த 65 வயதுக்கு மேற்பட்டவர்கள் தொகையானது 2040 ஆம் ஆண்டில் 1.3 பில்லியனாக அதிகரிக்கும் என மேற்படி தரவுகள் தெரிவிக்கின்றன.

5வயதுக்கு கீழ்ப்பட்ட சிறுவர்கள் தொகையை விட வயோதிபர்கள் தொகை வரலாற்றில் முதல் தடவையாக அதிகரிக்கவுள்ளது என அமெரிக்க குடிசன மதிப்பீட்டு பணிமனையைச் சேர்ந்த கெவின் கின்ஸெலா மற்றும் வான் ஹீ ஆகியோரால் கூட்டாக வெளியிடப்பட்ட மேற்படி அறிக்கையில் சுட்டிக்காட் டப்பட்டது.

வயோதிபர்களின் தொகை அதிகரிப்பானது ஓய்வூதியம், சுகாதார செலவுகள், பொது செலவினம் என்பவற்றில் பாரிய அதிகரிப்பை ஏற்படுத்தி செல்வந்த நாடுகளிலும் வறிய நாடுகளிலுமான பொருளாதார வளர்ச்சியில் மந்த நிலையை ஏற்படுத்தும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


2040 ஆம் ஆண்டுக்குள் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் 65 வயதுக்கு மேற்பட்ட ஒரு பில்லியனுக்கும் அதிகமான வயோதிபர்களை கொண்டிருக்க வாய்ப்புள்ளதாக கூறப்படுகின்றது. இது உலக மொத்த வயோதிபர் சனத்தொகையில் 76 சதவீதமாகும்.

உலகில் ஒவ்வொரு மாதமும் 8 இலட்சத்து 70 ஆயிரம் பேர் 65 வயதை அடைகின்றார்கள். எதிர்வரும்10 வருட காலப் பகுதியில் உலகில் 1.9 மில்லியன் பேர் 65 ஆவது பிறந்த நாளை கொண்டாடவுள்ளனர்.

நாடுகளும் வாணிபங்களும் சரியான திட்டங்களை வகுத்து செயற்படுமானால் இந்த வயோதிபர்கள் சனத்தொகையை பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்ய வைக்க முடியும் என அமெரிக்க குடிசன மதிப்பீட்டு பணிமனையின் அறிக்கை கூறுகின்றது. (ஓ-4)

# உலகளாவிய ரீதியில் வசூல் சாதனை படைத்த புதிய 'ஹரி பொட்டர்' திரைப்படம்

(லொஸ் ஏஞ்சல்ஸ்)




புதிய ஹரி பொட்டர் திரைப் படமானது திரை யிடப்பட்டு 5 நாட் களில் உலகளாவிய ரீதியல் 396.7 மில்லியன் அமெரிக்க டொலரை வருமானமாக ஈட்டி வசூல் சாதனை படைத்துள்ளது.

2007 ஆம் ஆண்டு ஸ்பைடர் மேன்- 3 திரைப் படத்தால் உலகளாவிய ரீதியில் 381.7 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானத்தை ஈட்டி நிறைவேற்றப்பட்ட சாதனையை ஹரி பொட்டர் அன்ட் த ஹாப்-பிளட் பிரின்ஸ் என்ற இந்த மாயாஜால திரைப் படம் முறியடித்துள்ளது.

அமெரிக்கா மற்றும் கனடாவில் மட்டும் மேற்படி ஹரிபொட்டர் படம் 159.7 மில்லியன் அமெரிக்க டொலரை வருமானமாக ஈட்டியுள்ளது. (ஓ-6)

# அரசியல் தீர்வுக்கான மக்கள் ஆணையை பெற்றுக் கொள்வதற்கே ஜனாதிபதி தேர்தல்

## வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியலமைப்பை மாற்றியமைத்து தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் மக்கள் ஆணையைப் பெற்றுக் கொள்வதற்காகவே ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படவுள்ளது.

தமிழ் தேசிய கூட்டமைப்பு உட்பட விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய குழுக்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பேச்சு வார்த்தைக்கு அழைத்திருக்கின்றமை வரவேற்கத்தக்கது என்று புதிய இடதுசாரி முன்னணியின் தலைவரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

இது தொடர்பாக வாசுதேவ நாணயக்கார மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதில் அதிக அக்கறை காட்டியுள்ளதோடு அதற்கான நகர்வுகளையும் முன்னெடுத்து வருகிறார்.

அண்மையில் படைத்தரப்பில் மேற்கொள்ளப்பட்ட அதிரடி மாற்றங்கள் அரசியல் தீர்வுக்கான முன்னேற்பாடாகும்.

அதே போன்று தமிழ் கூட்டமைப்பு உட்பட புலிகளுடன் தொடர்புள்ள குழுக்களும் பேச்சு வார்த்தை நடத்த முன் வருமாறு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார். இது வரவேற்கத் தக்கது. எனவே இந்த அழைப்பை ஏற்று தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்த முன்வரவேண்டும்.

அத்தோடு தற்போதைய அரசியலமைப்பை மாற்றியமைத்து தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்காக மக்கள் ஆணையை பெற்றுக் கொள்ளும் பொருட்டே ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படவுள்ளது.

இதற்கு மக்கள் ஆதரவு வழங்க வேண்டும். இத்தேர்தலின் பின்னர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்படும். இதன் மூலம் நாட்டில் ஜனநாயகம் ஏற்படுத்தப்படும் என்று தெரிவித்தார். (ஓ-4)

# நாட்டை அபிவிருத்தி செய்வதே அதனை மீட்டெடுத்த வீரர்களுக்கான கௌரவிப்பு

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

தாய்நாட்டை மீட்டெடுத்த படைவீரர்களுக்கு உரிய கௌரவமளிக்க வேண்டுமாயின் நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதப் பிடியிலிருந்து தாய் நாட்டை மீட்டெடுக்கும் முயற்சிகளின் போது பல்வேறு வழிகளில் சர்வதேச அழுத்தம் பிரயோகிக்கப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஜீ.எஸ். பி. வரிச்சலுகை, வெளிநாட்டு கடன் வழங்கல் முடக்கம், மனித உரிமை மீறல் குற்றச்சாட்டு என சர்வதேச சமூகம் பல வழிகளில் அழுத்தம் கொடுத்தாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எவ்வாறெனினும் மக்கள் வழங்கிய பேராதரவே தாய் நாட்டை வெற்றிப் பாதைக்கு இட்டுச் சென்றதாக அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் மொனராகலைப் பகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டமொன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தாய் நாட்டைப் பாதுகாக்கும் நோக்கிலேயே சகல நடவடிக்கைகளுக்கும் மேற்கொள்ளப்பட்டதாகவும் தேர்தல்களை இலக்கு வைத்து எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ-4)

# இன்று இந்நூற்றாண்டின் நீண்டநேர சூரிய கிரகணம்

(கொழும்பு)

நீண்ட நேரம் நிலவுகின்ற சூரிய கிரகணம் இன்று புதன்கிழமை ஏற்படவுள்ளது. சூரியனுக்கும் பூமிக்கும் இடையே சந்திரன் வரும் போது சூரியனின் ஒளிக்கதிர்கள் மறைக்கப் படுகின்றன. இதனால் பூமியின் சில பகுதிகளில் சந்திரன் மறைப்பதால் ஏற்படும் நிழல் கார ணமாக பகலிலேயே இருள் ஏற்படும்.

நாளை சூரிய உதயத்துடன் ஏற்படும் இந்தக் கிரகணம் 5 மணி 14 நிமிடங்களுக்கு நீடிக்கப்போகிறது.

இலங்கையில் காலை 6.21 க்கு உச்சகட்டமாக இருக்கும். அப்போது சூரியனின் 40 வீதத்தை சந்திரன் மறைத்தி ருப்பதைக் காணக்கூடியதாக இருக்கும். இதுவே இந்த 21 ஆம் நூற்றாண்டின் மிகப் பெரிய சூரிய கிரகணமாக இருக்கும். அதிகாலை 05.28 நிமிடத்திற்குத் துவங்கும் இந்த கிரகணம், காலை 10 மணி 42 நிமிடங்கள் வரை நீடிக்கும்.

இன்று காலை நிகழவிருக்கும் சூரியகிரகணத்தை இலங்கை, இந்தியா, நேபால், பங்களாதேஷ், பூட்டான், மியன்மார், சீனா உட்பட பல நாடுகளில் காணக்கூடியதாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-4)

# மரக்கறி, பழவகைகளை எடுத்துச் செல்வதற்கு பிளாஸ்டிக் கூடைகளை பயன்படுத்த வேண்டும்

## விரைவில் சட்டமாக்கப்படும் என்கிறார் டாக்டர் விஜேரத்ன

(கொழும்பு)

மரக்கறி மற்றும் பழவகைகளை ஓரிடத்திலிருந்து பிறிதொரு இடத்துக்கு எடுத்துச் செல்வதற்கு பிளாஸ்டிக் கூடைகளைப் பயன்படுத்த வேண்டுமென்பதைக் கட்டாயப் படுத்தி விரைவிலேயே சட்டமொன்று கொண்டு வரப்படவிருப்பதாக விவசாய அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் டாக்டர் விஜேரத்ன தெரிவித்தார்.

நாட்டின் சில பகுதிகளில் இத்திட்டம் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும், தம்புள்ள போன்ற பொருளாதார மையங்களுக்கு இத்திட்டம் பற்றி அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருப்பதாகவும்அங்கு அரசாங்கத்தால் அரைவாசி விலைக்கு வழங்கப்பட்ட பிளாஸ்டிக் கூடைகளை முற்றிலும் பயன்படுத்தப்படுவதில்லை என தெரிய வந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

மரக்கறிகள் அத்துடன் மற்றும் பழங்களை ஓரிடத்திலிருந்து வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்லும் போது ஏற்படும் அழிவுகளைத் தடுப்பதை சட்டபூர்வமாக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாகவும் இவ்வாறான அழிவுகள் தடுக்கப்பட்டால் பொருட்களின் விலை பெருமளவு குறைந்து நுகர்வோருக்கு பெரும்நன்மை ஏற்பட இடமுண்டு என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஓ-6)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

### முடிதும்பை

Botanical Name -Leucas Zeylanica
Family - Labiatae
Eng - Thumbe
Sing - Geta - thumba

பல கிளைகளுடன் நன்கு அடர்த்தியாக 30 செ.மீ உயரம் வரைக்கும் வளரும் ஒரு சிறு செடி. அடித்தண்டு சுமார் அரை செ.மீ வரை குறுக்களவுள்ளது. வரம்புகளை உடையதாகவும், நல்ல சொரசொரப்புடனும் இருக்கும். பெரும்பாலான கணுக்களில் இலைகள் கொத்துக் கொத்தாக காணப்படுகின்றன. சில கணுக்களில் பக்கத்திற்கு ஒன்றாக இரண்டு இலைகளும், வேறு சிலவற்றில் பக்கத்திற்கு இரண்டாக நான்கு இலைகளும் காணப்படுகின்றன. இலை நீண்டு, அகலமற்று கத்தி வடிவமாகவும், நல்ல சொரசொரப்புடனும், தடிப்புடனும், நல்ல மணத்தோடும் காணப்படும்.

இலை சுமார் 3 முதல் 6 செ.மீ நீளமும், ½ அல்லது ¾ செ.மீ அகலமும் உடையது. இரண்டு, மூன்று அடுக்குகளுடைய வட்ட வடிவமான பூங்கொத்தில் வெண்ணிறப் பூக்களைக் காணலாம். சிறிய பூவிதழ் ஒன்று ஒரு பக்கமாக இருக்கும்.


**பரம்பலும், இனவிருத்தியும்**

சமவெளிகளில் கூடுதலாகக் காணலாம். தோட்டம், தரிசு நிலங்களில் தானாக முளைத்து களைச் செடிபோன்று காணப்படுகிறது. எல்லா வகை மண்ணிலும் வளரும். புதிய சிறு கன்றுகளை பிடுங்கி வந்து நட்டுப் பயிராக்கலாம்.

**மருத்துவப் பயன்கள்**

இலையில் சிறிது விறுவிறுப்பும், உரைப்பும், விரும்பும் மணமும் உண்டு. சிறிது அழுத்தமான சக்கை அதிகமில்லை. ஐந்து நடுத்தரமான கொழுந்து இலைகளுக்கு மேல் ஒருவர் ஆரம்பத்தில் உண்பது கூடாது. அதுவும் அவற்றை தனியாக உண்பது கூடாது.

திருவாத்தி, செம்பரத்தை, நந்தியவட்டம், துத்தி, வில்வம் இவற்றின் இலைகளில் ஏதாவது ஒன்றுடன் 1:4 என்ற விகிதத்தில் கலந்துண்ண வேண்டும். இந்த விகிதத்தில் சேர்த்து தயாரிக்கப்பட்ட சாறு 30 மில்லியும் தூள் 1 தேக்கரண்டியும் தக்க அனுபானத்தோடு உண்ணலாம். முளைக்கீரை, அரைக் கீரைகளோடு ஒருவருக்கு 5 இலைகள் வீதம் சேர்த்து கூட்டுத் தயாரித்து உண்ணலாம்.



பின்னர் தனி இலைச்சாற்றை தக்க அனுபானத் தோடு உண்ணலாம். வாடாத பூக்களை அரைத்து அத்துடன் பாலும், தேனும் சேர்த்தோ அல்லது தக்காளி, தயிர், இஞ்சி சேர்த்தோ துவையல் செய்தோ உண்ணலாம்.

இவற்றுடன் தக்காளி, தேங்காய் சேர்த்து சட்னி செய்யலாம். இந்த இலைகளை கலவைக் கீரையுடன் சேர்த்து சமைத்துண்பது சிறந்தது. இதனால் இருமல், மலச்சிக்கல், சுவாசப்பை கோளாறுகள், கருப்பை பற்றிய நோய்கள் வராமல் தடுக்கும்.

◆ 5 இலைகளின் தனிச் சாற்றை 90 மில்லி வாழைப்பட்டைச் சாற்றுடன் கலந்து விஷக்கடிகளுக்கு கொடுக்கலாம்.

◆ தும்பைச் செடியை வேருடன் பிடுங்கி வேரை மட்டும் வெட்டி தண்ணீரில் கழுவிச் சுத்தம் செய்து தூளாக வெட்டி ஒரு சட்டியில் போட்டு ஒரு டம்ளர் தண்ணீர் விட்டு அரை டம்ளர் அளவிற்கு சுண்டக்காய்ச்சி வடிகட்டி ஒரு வேளை மட்டும் உட்கொண்டு வர நீர்க் கோவை, தலையிடி, சீதள சன்னி தீரும்.

◆ குழந்தைகளுக்கு ஏற்படும் மந்தம், வயிற்றுக் கோளாறு குணமாக ஒரு சங்கில் பாதியளவு தண்ணீர் விட்டு அதில் இரண்டு துளி தும்பைச் சாற்றையும், இரண்டு துளி உத்தாமணியிலைச் சாற்றையம், தேக்கரண்டியளவு தேனையும் சேர்த்து கலக்கி கொடுத்து விட வேண்டும். காலை மாலையாக 3 வேளை கொடுக்கலாம்.

◆ சளியால் வரும் காய்ச்சல் குணமாகவும், மூக்கு நீர் வடிவதை தடுக்கவும் ஒரு கைப்பிடியளவு தும்பைப்பூவை ஒரு சட்டியில் போட்டு அடுப்பில் வைத்து லேசாக வதக்கி ஒரு டம்ளர் தண்ணீரை விட்டு நன்றாக கொதிக்க வைத்து இறுக்கி அதில் 2 தேக்கரண்டியளவு தேன் சேர்த்து கலக்கி 3 பங்காக்கி காலை, பகல், மாலை ஆக ஒரு நாளைக்கு 3 வேளையாக 2 நாள் கொடுத்து வர மேற்கூறிய நோய்கள் தணியும்.

◆ தேள்விஷம் முறிய தும்பையிலைகளை மைபோல அரைத்து எலுமிச்சம்பழமளவு உள்ளுக்கு கொடுத்து சக்கையை கடிவாயில் தேய்க்க விஷம் முறியும்.

◆ மாதவிடாய் காலத்தில் இரத்தப்போக்கு கூடுதலாக இருந்தால் தும்பையிலைகளை அம்மியில் வைத்து எலுமிச்சம்பழச்சாறு விட்டு மைபோல அரைத்து எலுமிச்சம்பழமளவு எடுத்து 50 கிராம் நல்லெண்ணெயுடன் கலந்து காலை வேளைகளில் மட்டும் உள்ளுக்கு கொடுத்து வந்தால் (7 நாட்கள் தொடர்ச்சியாக கொடுக்கலாம்) இரத்தப் போக்கு நிற்கும்.

◆ மூளைக்காய்ச்சலுக்கு தும்பைப் பூக்களை சேகரித்து அதற்கு அரைவாசி மிளகையும் சேர்த்து மைபோல அரைத்து மிளகளவு உருண்டையாக உருட்டி நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும். ஒரு வேளைக்கு 3 மாத்திரை எடுத்து வெந்நீரில் உரைத்துக் கொடுக்க மூளைக் காய்ச்சல் தணியும்.

◆ சொறி, தடிப்பு, நமைச்சல் குணமாக ஒரு கைப்பிடி தும்பை இலைகளை சுத்தம் செய்து மிளகு 10, பூண்டு 10 பல், சிறிது பெருங்காயம் சேர்த்து அரைத்து உப்பு, புளி, காரம், சேர்த்து துவையல் செய்து உண்ணலாம்.

◆ தலைப்பொடுகு நீங்க - தும்பைப்பூ 50 கிராம் நல்லெண்ணெய் 100 கிராம் சேர்த்துக் காய்ச்சி தலைக்கு தேய்த்து தலை முழுகி வந்தால் நீங்கும்.

◆ தலைவலி நீங்க நல்லெண்ணெயில் 25 தும்பைப்பூ போட்டு காய்ச்சி ஆறவைத்து தலைக்கு தேய்த்து தலை முழுக தலைவலி குணமாகும்.

மற்றும் எத்தகைய தலைவலியாக இருந்தாலும் தும்பை இலைச்சாறு ஒரு துளி மூக்கில் உறிஞ்ச குணமாகும்.

உடற்கலங்கை அழியவிடாது, தேகத்தை ஆரோக்கியமாகவும், பலமாகவும் வைத்திருக்க தும்பை, துளசி, குப்பைமேனி, கரிசலாங்கண்ணி ஆகியவற்றின் சமஅளவு சாற்றில் தாமரை இதழ் சூரணம் போட்டு நெய், தேன் சேர்த்து லேகியம் செய்து நாளும் சாப்பிட்டால் உடல் அழியாது மலர் போல் பொலிவுற்று இருக்கும். ++++

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S)
சிரேஷ்டவிரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம், கைதடி

# ஆரோக்கியமான முதுமைக்கு ...

இன்றைய அவசர உலகில் (Fast Food world) முதுமை என்பது ஒரு 'சுமை' ஆகி விட்டது. முதுமை வாழ்ந்து முடித்ததற்கான அடையாளம் அல்ல என்பதை இன்றைய இளம் சமூகத்தினர் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவும், வாழவும் முடியாமல் சாகவும் வழி தெரியாமல் நம்மிடையே தவிக்கின்ற நம் சிரேஷ்ட பிரஜைகளை (Senior Citizens) அதாவது முதியவர்களின் (Elderly / older Persons) ஆரோக்கிய முதுமைக்கு (Healthy Ageing) வழிகாட்டுவதுமே இக் கட்டுரையின் நோக்கங்கள் ஆகும். ஏனெனில் நாமும் என்றோ ஒருநாள் 'முதுமை' அடையப் போகின்றோம் அல்லவா?

**'முதுமை' என்பது என்ன?**

முதியவர்கள் / சிரேஷ்ட பிரஜைகள் என 60 வயதிற்கு மேற்பட்டவர்களை அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளும் 65 வயதிற்கு மேற்பட்டவர்களை அபிவிருத்தி அடைந்த நாடுகளும் வரையறை செய்கின்றன. இதற்கு விதிவிலக்குகள் உண்டு. 40 வயதிலேயே முதுமைக்கோலம் பூணுபவர்களையும் 70 வயதுகளில் துள்ளித்திரிபவர்களையும் நாம் நம் சமூகங்களில் காண்கின்றோம். அப்படியானால், முதுமை என்பது??? ஆம்!, உண்மையில் முதுமையை வயது, வரையறை செய்வது இல்லை. உடல், உள மாற்றங்களைக் கொண்டு நோக்குவதே பொருத்தமானதாக இருக்கும். கேட்டல், பார்வைக் குறைபாடுகள் ; உள பாதிப்புக்கள் (Mental Impairement) "சாதாரண முதுமையின் (Normal Ageing) முக்கியமான மாற்றங்களாகும்.

முதுமை யில் ஏற்படுகின்ற பிரச்சினைகள் அனேகமாக உள நலன் குறைவடைவதால் ஏற்படுவதாகத் தான் இருக்கின்றன.

இதற்கு அப்பால் சனத் தொகையில் 10 வீதம் முதியவர்களைக் கொண்ட நாடு "முதுமையடைந்த நாடு (ELDERLY COUNTRY)" என வரையறுக்கப்படுகின்றது. இலங்கையை பொறுத்தவரையில், தென் ஆசியாவிலேயே மிக வேகமாக முதுமை அடையும் சனத்தொகை கொண்ட நாடு என அறிவித்துள்ள உலக வங்கி எதிர்காலத்தில் சுகாதா

| ஆண்டு | முதியவர் சனத் தொகை வீதம் |
|---|---|
| 1953 | 5.3 % |
| 2001 | 9.0 % |
| 2003 | 10.8 % |
| மேலும், | |
| 2009 | 11 % |
| 2025 | 25 % |
| 2050 | 28.5 % |

ரம்,பொருளாதாரம் மற்றும் அனைத்து உதவிகளையும் முதிய சனத்தொகைக்கு (ELDERLY POPULATION) வழங்குவதற்கு பாரிய சவால்களை எதிர்கொள்ள நேரிடும் எனவும் எச்சரித்துள்ளது.

அதனை பின்வரும் உலக வங்கியின் தரவுகள் மூலம் விளங்கிக்கொள்ள முடியும். ஆக அதிகரிக்கலாம் எனவும் உலக வங்கி எதிர்வு கூறுகின்றது.

தவிர, 'முதியவர்கள்' என்றதும் எமக்கு இரண்டு வார்த்தைகள் நினைவிற்கு வரும்,

1) மாறாட்டம் (CONFUSION)

2) அறளை பெயர்த்தல்(DEMENTIA)

**மாறாட்டம் (CONFUSION)**

"உடல் நோய்களினால் மூளைக்கு ஏற்படுகின்ற தாக்கத்தின் அறிகுறி" என விளங்கிக்கொள்ள முடியும். இம்மாறாட்டங்களிற்கு நீண்ட, நாட்பட்ட மூளையைப் பாதிக்கும் நோய்கள் தவிர சடுதியாக தோன்றும் பாரிசவாதம் போன்ற நோய்களும் காரணமாகலாம்.

**அறளை பெயர்தல் (DEMENTIA)**

"உயிர் வாழும் உடலில் இறக்கும் மூளை" என கொள்ளப்படுகின்றது. இது 60 வயதிற்கு மேற்பட்ட முதியவர்களில் 5 வீதமும்80 வயதிற்கும் 85 வயதிற்கும் இடைப்பட்ட முதியவர்களில் 10 சதவீதம் ஆகவும் காணப்படுகின்றது. 'அறளை' மாற்ற முடியாத ஓர் நோய் நிலை என்பதனையும் நோயாளி ஓர் சிறு குழந்தை போல் மாறிவிடுவதையும் உறவினர்கள்/பாராமரிப்பாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இதற்கு நாம் முதுமையடைந்த நோயாளியுடன் அன்போடு (WITH LOVE), ஆதரவு (CARE) உடன் நடந்து கொள்ளுதல், வாழ்கின்ற சூழலை குழப்பம் இன்றி அமைத்தல் மூலம் புனர்வாழ்வளிக்க (REHABILITATION) முடியும்.

**சமூகத்தின் பங்களிப்பு**

முதியவர்/சிரேஷ்ட பிரஜையும் சமூக பிராணியாக உள்ளமையால் அவர்கள் சமூகத்திலிருந்து விலகிப் போகவும் முடியாமலும் தான் சார்ந்துள்ள சமூகத்தில் ஆரோக்கிய முதுமையை முன்னெடுக்க முடியாமலும் தவிப்பது பலரிற்கு புரிவதில்லை. இதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்?

◆ அன்பு (LOVE), அரவணைப்பு (CARE) முதுமையை எட்டிய பெற்றோரிடம், சுற்றத்தாரிடம் காண்பிக்க வேண்டும்.

◆ முதுமையை அடைந்துவிட்டால் துணை இன்றி வாழ்வது என்பது கஷ்டமாகும். எனவே, முதியவர்களை ஒதுக்கி வைப்பதையோ, முதியவர் விடுதிகளில் சேர்ப்பதையோ இயலுமானவரை தவிர்க்கவேண்டும்.

◆ ஓய்வு காலத்தில் (DURING RETIREMENT), சும்மா இருப்பதாக குத்தி காட்டுவது, தனித்து விடப்படுவது, புறக்கணிக்கப்படுவது தவிர்க்கப்பட வேண்டும். இதனால் முதியவர்கள் உளநெருக்கீடுகளிற்கு (EMOTIONAL STRESS) ஆளாகிறார்கள்.

◆ ஒவ்வொரு மனிதனது மனமும் தெரிந்தோ தெரியாமலோ அமைதிக்கான தேடலில் ஈடுபடுகின்றது. எனவே இதற்கு முதியவர்களும் விதி விலக்கல்ல. அவ்வாறான சூழலை நாம் அவர்களிற்கு உருவாக்கிக் கொடுக்க முயற்சிக்க வேண்டும்.



◆ ஐக்கிய அமெரிக்காவில் 17 முதியவர்கள் தினமும் தற்கொலை செய்து கொள்வதாக செய்தித் தொடர்பு சாதனங்கள்(MASS MEDIA) தெரிவிக்கின்றன. முதியவர்களை நாம் ஆன்மீக பாதை வழிசெல்ல வழிகாட்ட வேண்டும். எமது வாழ்வோட்டத்தில் ஆன்மீகத்தின் பங்கு இயல்பா கவே அமைந்து விட்டது குறிப்பிடத்தக்கது.

◆ நலிந்த முதியவர்களின் (FRAIL ELDERS) வாழ்க் கையை மேம்படுத் துவதற்கும் ஆரோக்கிய முதுமையினூடான (TOWARDS HEALTHY AGEING) அவர்களின் பங்களிப்பினை உறுதிப்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். ஏனெனில் ஒவ்வொரு முதியவரும் வாழ்க்கையில் கிடைத்தற்கரிய புத்தகங்கள்.

இன்று யாழ் மாவட்டத்தை பொறுத்தவரை அனேகமான முதியவர்கள் பிள்ளைகள், உறவினர்கள் இன்றி தனித்து விடப்பட்டுள் ளனர். அகதி முகாம்களில் வாழ்க்கையை நடத்துகிறார்கள்.

இதனால் ஏற்படுகின்ற தனிமை, வெறுமை அவர்களை உளரீதியாக பாதிக்கின்றன. எனவே முதியவர்களுடன் கலகலப்பாக ஆதரவாக பேசி அவர்களிற்குப் பிள்ளை களாக இருங்கள். அப்போது முதுமையின் வேதனை அவர்களிற்கு தெரியாது.

**முதியவர்கள் சம்பந்தமான தேசிய கொள்கை**

**NATIONAL POLICY ON AGEING**

◆ நலிந்த முதியவர்களை சமூக ரீதியாக, பொருளாதார ரீதியாக, உடல்ரீதியாக, ஆன்மீக ரீதியாக ;

◆ அவர்களின் சுதந்திரம், பங்களிப்பு, ஆதரவு/கவனிப்பு, சுயதிருப்தி, சுய கௌரவம் என்பவற்றை உறுதிப்படுத்தல்.

**முதியவர்களின் நலன் சம்பந்தமான சட்டமுறைகள்**

**LEGISLATION FOR THE ELDERLY WELFARE**

முதியவர்களின் உரிமைகளை பாதுகாக்க உருவாக்கப்பட்ட சட்டம் இல 09 , 2000 (ACT 09,2009)இலுள்ள முக்கிய விடயங்கள் ;

◆ முதியவர்களிற்கான தேசிய சபையை ஆரம்பித்தல்.

◆ முதியவர் உரிமையைப் பாதுகாத்தல்.

◆ முதியவர்களிற்கு சேவைகளை வழங்கும் நபர்கள், ஸ்தாபனங்களை பதிவு செய்தல்.

◆ முதியவர் நலன்கருதி தேசிய நிதியத்தை ஸ்தாபித்தல்.

◆ முதியவர்களின் முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கும் அவர்களின் பிரச்சினைகள் சம்பந்தமான கோரிக்கைகளினை நிர்ணயிப்பதற்கும் சபைகளை நியமித்தல்.

மேலும் கர்ப்பகால, குழந்தைகள் நல, வனிதைகள் நல ஆரோக்கியத்தை பேணுவதற்கும் மேம்படுத்துவதற்கும் நோய்த் தடுப்பு

**Dr. S. குமுதினி**
பொது சுகாதார ஆயுள்வேத
வைத்திய அதிகாரி
வடமராட்சி.

பிரிவினால் (PREVENTIVE HEALTH) நடவடிக்கை எடுக்கப்படுவது போன்று முதியவர்கள் சுகநலத்திலும் புனர்வாழ்வு நடவடிக்கைகளிலும் (GERIATRIC ASSESSMENT, PREVENTION & REHABILITATION) அதிகளவில் செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்படுவது இன்றைய காலத்தின் தேவையாகும்.

"ஆரோக்கியமான முதுமை
சாபமல்ல, வரம்!"

*"HEALTH IS EVERYTHING"*

## எவரும் ஆயுதங்களை ஏந்த முடியாதவாறு பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படும்

## அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல உறுதி

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் நடைபெற்று வந்த இராணுவ ரீதியிலான போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ள போதிலும், புலிகள் முழுமையாகத் தோற்கடிக்கப்பட்டு விட்டார்கள் எனக் குறிப்பிட முடியாது என்று தேசிய பாதுகாப்புப் பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் எவரும் ஆயுதங்களை ஏந்த முடியாத வகையில் கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் உறுதியளித்துள்ளார்.

இது தொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்களும் அவ்வியக்கத்துக்கான ஆதரவாளர்களும் தற்போது வெளிநாடுகளில் செயற்பட்டு வருகின்றனர். கே.பி. என்று அழைக்கப்படும் கே. பத்மநாதன் என்பவர் எங்கோ இருந்து கொண்டு செயற்படுகின்றார்.

உண்மையான யுத்தம் தரையில் அல்ல கடலில் இருப்பதாக கடற்புலிகளின் தலைவர் சூசை ஒருசமயத்தில் குறிப்பிட்டிருந்தார். எனினும் அவை அனைத்தையும் பாதுகாப்பு தரப்பினர் தற்போது வெற்றி கண்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் போராட்டத்திற்கு ஆதரவாக வெள்ளையர்களும் செயற்பட்டார்கள். உலகில் எந்தவொரு அமைப்பிற்கும் இல்லாத பலத்தை விடுதலைப் புலிகள் கொண்டிருந்தார்கள். அவர்கள் விமானம் வைத்திருந்தார்கள்.

எனினும், அந்த பலத்தை இலங்கை படைவீரர்கள் முறியடித்து விட்டனர். விடுதலைப் புலிகள் மீண்டும் எழுவதற்கான வாய்ப்புகள் மிகவும் சொற்பளவிலேயே காணப்படுகின்றன. போர் முடிபடைந்தாலும் அதன் மாயை இன்னமும் முடியவில்லை.

தற்போது கரையோரப் பாதுகாப்பு அண்மையில் பலப்படுத்தப்பட்டது மிக முக்கியமான விடயம். இதனால் எந்தவொரு தரப்பினரும் நாட்டுக்குள் அத்துமீறி நுழைந்து விட முடியாது. அந்தளவுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றார். (ஓ-4)

## முறையற்ற வர்த்தக நிறுவனங்களை மாற்றியமைப்பதற்கு பயிற்சித்திட்டம்

## தொழில் உறவுகள் அமைச்சர் அத்தாவுட தெரிவிப்பு

(கொழும்பு)

வடமாகாணத்தில் காணப்படுகின்ற முறையற்ற வர்த்தக நிறுவனங்களை முறையான நிறுவன கட்டமைப்புக்குள் உள்வாங்கும் நோக்கில் பயிற்சி வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளதாக தொழில் உறவுகள் மற்றும் மனிதவலு அமைச்சர் அத்தாவுடன செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

இந்த பயிற்சி வேலைத்திட்டமானது வடமாகாணத்தின் அனைத்துப் பிரதேசங்களிலும் மேற்கொள்ளப்படவுள்ளது.

வடக்கின் வசந்தம் என்ற நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் இந்த பயிற்சி வேலைத்திட்டத்துக்காக ஆறு மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் தேசிய பொருளாதாரத்தை பலப்படுத்துவதற்காக முறையற்ற வர்த்தக நிறுவனங்கள் மூலம் பாரிய பங்களிப்பு ஒன்று கிடைக்கின்றது.

சிறந்த பயிற்சி ஊடாக இவ்வாறான முறையற்ற நிறுவனங்களை முறையான நிறுவனங்களாக மாற்றுவதன் மூலம் நாட்டின் தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும்.

முறையற்ற அமைப்புக்கள் ஊடாக பொருளாதாரத்துக்கு கிடைக்கின்ற பங்களிப்பு தொடர்பில் ஆய்வு செய்யும் நடவடிக்கைகள் எமது வலய நாடுகளில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எனவே இலங்கையிலும் இது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பில் தேசிய கொள்கை ஒன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது எனத் தெரிவித்தார்.

(ஓ-4)

இருளில் பெற்றோம் (சுதந்திரம்) ஆனால் இன்னும் விடியவில்லை.

– மேத்தா

வலம்புரி

## சுற்றிவரப் படையினர் சுதந்திரமான தீர்வு எது?

தமிழ் மக்களுக்கு விரைவில் தீர்வு வழங்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உறுதியாகவுள்ளார் என யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்த போக்குவரத்து அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்திருந்தார்.

யுத்தம் முடிந்துவிட்டது. தமிழ் மக்களுக்கு உணவும் உறைவிடமும் கொடுத்தால் அது போதும். அவர்களுடைய பிரச்சினை அதுதான் என அமைச்சர் சம்பிக்க ரணவக்க மிக அண்மையில் கூறியிருந்தார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அமைச்சரவையில் உள்ள அமைச்சர் ஒருவர் மிகத் துணிகரமாக கூறியிருந்த நிலையில், தமிழ் மக்களுக்கான தீர்வை மிக விரைவில் ஜனாதிபதி முன்வைப்பார் என்ற தகவல் எந்தளவு தூரம் சாத்தியமானது என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வு அவர்களின் சுய நிர்ணய உரிமையை முழுமைப் படுத்துவதாக இருக்கவேண்டும்.

ஆனால் இன்றுவரை சுமார் மூன்று இலட்சம் மக்கள் முகாம்களில் அடைக்கப்பட்டுள்ளனர்.

சாதாரணமாக அவர்களால் நடமாட முடியவில்லை. உறவுகளைப் பார்க்க முடியவில்லை.

உயிரிழந்துபோன தம் உறவுகளுக்கு பிதிர்க் கடன் ஆற்ற இயலவில்லை. அங்கு பிறக்கின்ற ஒவ்வொரு குழந்தைக்குமான வதிவிட முகவரி ஆனந்தகுமாரசாமி... கதிர்காமர்... நலன்புரி நிலையம் என்பதாக இருக்கிறது.

பத்தியம் பார்ப்பதற்கும் முடியாத பரிதாபத்தில் எங்களுக்கும் உரிமை கிடைக்கும் என எதை வைத்து நம்புவது.

ஆக, தமிழ் இனத்திற்கு ஏதோவொரு தீர்வு கிடைக்கத்தான் போகிறது அது 13–வது திருத்தமாக அல்லது 13–வது திருத்தத்தை விட மேலதிகமானதாக இருக்கலாம்.

அவை எதுவுமே தமிழ் மக்களின் உரிமையை வழங்கப்போவதில்லை என்பது நிறுத்திட்டமான உண்மை.

தீர்வுத் திட்டங்கள் எதுவுமே உரிமைகளை தந்துவிட மாட்டாது. அவை அமுல்படுத்தப்பட வேண்டும்.

இலங்கையில் சட்டங்களை அமுலாக்குவது என்பது கல்லில் நார் உரிப்பதற்கு ஒப்பானது.

அதேநேரம் தீர்வுத்திட்டத்தை முன்வைத்த பின்னர் எல்லா உரிமைகளும் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்டுவிட்டது என்ற அடிப்படையில்,


தமிழர் தாயகத்தில் வீதியெங்கும் ஆயுதமேந்திக் காவல் காக்கும் படையினர் தென் பகுதிக்கு மீள அழைக்கப்படுவார்களா? இல்லவேயில்லை.

13–வது திருத்தச் சட்டமூலம் ஒருபுறம். தமிழர் பகுதியெங்கும் படையினர் மறுபுறம் என்ற இரட்டை நிலை இருக்கும். இது உரிமையாகாது என்பதை எவரும் ஏற்றுக்கொள்வர்.

# அங்கவீனர்களின் நலன்புரி விடயங்கள் தொடர்பில் விசேட ஜனாதிபதி பிரிவு உருவாக்க நடவடிக்கை

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)



பயங்கரவாதம் காரணமாக கடந்த மூன்று தசாப் தங்களாக அங்கவீனமாகியிருந்த இலங்கை நாட்டுக்கு சிகிச்சையளித்து குணப்படுத்தியமை போன்று சதித்திட்டத்தினூடாக காலணித்துவவாதிகள் மற்றும் அவர்களின் உள் நாட்டு பிரதிநிதிகளால் அங்கவீனமாக்கப்பட்ட கிராமியவிவசாயப் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப நடவடிக்கை எடுப்பேன் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அங்கவீனர்களின் நலன்புரி விடயங்கள் தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக விசேட ஜனாதிபதி பிரிவு ஒன்றை உருவாக்கவுள்ளேன் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

மொனராகலை பெல்வத்த சீனித் தொழிற்சாலை வளாகத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற அங்கவீனத்துக் குட்பட்டவர்களுடனா சந்திப்பின்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஜனாதிபதி அங்கு மேலும் கூறியதாவது,

கிராமங்களின் வளங்களை கிராமங்களுக்கு பயன்படும் வகையில் ஈடுபடுத்தி இளம் சந்ததியினரை திறமையுள்ளவர்களாக மாற்றியமைத்து சதித்திட்டத்தினூடாக வறுமைக் குள்ளாக்கப்பட்ட மக்களை அதிலிருந்து மீட்க நடவடிக்கை எடுக்கப்படும். இந்த வேலைத்திட்டத்துக்காக பிரதேச சபை உறுப்பினர் முதல் ஜனாதிபதி வரையான அரசியல்வாதிகளும் கிராமத்தில் கீழ் மட்டட அதிகாரியிலிருந்து மேல்மட்ட அதிகாரி வரை நாட்டைக் கட்டியெழுப்பும் நடவடிக்கையில் அர்ப்பணிப்புடன் ஈடுபட வேண்டும்.

பயங்கரவாதத்திலிருந்து நாட்டை விடுவிக்கும் நடவடிக்கையின் போது சுமார் ஐயாயிரம் இளைஞர்கள் அங்கவீனத்துக்குட்பட்டனர். அவர்களினதும் ஏனைய அங்கவீனர்களினதும் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றி அவர்களையும் நாட்டைக்கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தில் பங்கு பெறச் செய்ய வேண்டும்.

அதேபோன்று அங்கவீனங்களுக்குள்ளானவர்களின் நலன்புரி விடயங்களை மேற்கொள்வதற்காக விசேட ஜனாதிபதி பிரிவு ஒன்றை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார். (ஓ-4)

# அரசின் சேவைகள் நேரடியாக மக்களைச் சென்றடைய வேண்டும் இதுவே மஹிந்த சிந்தனையின் கொள்கை என்கிறார்

## ரோகண திஸாநாயக்க

(கொழும்பு)

அரசாங்கத்தின் அனைத்து சேவைகளுமே மக்களைத் தேடி அவர்களின் கிராமங்களுக்கும் வீடுகளுக்கும் நேரடியாகச் செல்ல வேண்டும். இதுவே மஹிந்த சிந்தனையின் கொள்கைத் திட்டம் என்று நகர அபிவிருத்தி மற்றும் புனித பூமி அபிவிருத்தி அமைச்சர் ரோகண திஸாநாயக்க தெரிவித்தார்.

நடமாடும் சேவையொன்றை ஆரம்பித்து வைத்து பேசிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதீபதி மஹிந்த ராஜபக்ஷ இந்நாட்டில் தலை விரித்தாடிய பயங்கரவாதத்தை பூண்டோடு அழிப்பதில் எந்த அளவு தீவிரமாக இருந்தாரோ அதே அளவு தீவிரமாக நாடும் நாட்டு மக்களும் எதிர்பார்த்திருக்கும் பொருளாதார வளத்தை ஏற்படுத்தும் பணியில் தற்போது இறங்கியுள்ளார். அந்தப் பணிக்கு அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள் மாத்திரமன்றி நாட்டிலுள்ள ஒவ்வொரு பிரஜையும் அர்ப்பணிப்புடன் தனது பங்களிப்பை நல்க வேண்டியது கட்டாயமாகும். மக்களின் பங்களிப்பு இருந்தால் மாத்திரமே பொருளாதார வளத்தில் ஏனைய நாடுகளின் முன்னிலையில் நமது நாடும் தலை நிமிர்ந்து நிற்க முடியும்.

இதற்காகத்தான் புதிய ஒரு பயணத்தின் ஆரம்பமாக இந்த மக்களுக்கான மக்களின் நடமாடும் சேவையை ஏற்பாடு செய்துள்ளோம். இது போன்ற நடமாடும் சேவைகள் ஒவ் வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்கும் விஸ்தரிக்கப்பட்டு மக்களின் குறைகளைக் கண்டறிந்து அவற்றுக்கு உடனுக்குடன் தீர்வு பெற்று க் கொடுக்க திடசங்கற்பம் பூண்டுள்ளோம்.

நாம் ஆரம்பித்துள்ள இவ் வேலைத்திட்டம் ஜனாதிபதியின் பொருளாதார மேம் பாட்டுக்கான பயணத்தின் ஒரு முக்கிய அங்கமாகும் என்றார். (ஓ-4)

## பெண்கள் அதிகார சபை அங்குரார்ப்பணம்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேசமட்ட பெண்கள் அதிகார சபை பிரதேச செயலர் செ. ஸ்ரீனிவாசன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இதில் நடப்பு நிர்வாக அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். தலைவராக திருமதி சி. பாலச்சந்திரன், செயலாளராக திருமதி ம. கீர்த்திநாதன், பொருளாளராக திருமதி ச.பாஸ்கரன் ஆகியோரும் மற்றும் உபதலைவர், உபசெயலாளர் உட்பட 11 நிர்வாக சபை அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (ஓ-4-29)

## கொமிர்சியக் கூட்டம்

(ஊர்காவற்றுறை)

யாழ். மறை மாவட்ட புனித மரியாயின் சேனையின் மாதாந்த கொமிசியக் கூட்டம் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். மறைக் கல்வி நடு நிலைய ஒன்றுகூடல் மண்டபத்தில் ஆன் மீக இயக்குநர் அருட்பணியாளர் றெஜி இராஜேஸ்வரன் அடிகளார் தலைமையில் நடைபெறவுள்ளது. செயற்குழு உறுப்பினர் கள் தவறாது வருகை தருமாறு கேட்கப்படுகின்றனர். (ஓ-72)

## அலங்கார உற்சவம்

(மருதங்கேணி)

தென்புலோலி உபய கதிர்காம ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் இன்று புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 16 நாட்கள் உற்சவம் நடைபெறவுள்ளது.

ஓகஸ்ட் 5 ஆம் திகதி புதன்கிழமை இரதோற்சவமும் 6 ஆம் திகதி வியாழக்கிழமை (திருவோண நட்சத்திரத்தில்) காலை 8. மணிக்கு தீர்த்த உற்சவமும் இடம்பெறவுள்ளது. (ஓ-35)

## அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்பாள் ஆலய கொடியேற்றம் இன்று

சக்தியும் சித்தியும் தருபவளே - தெய்வ
நாயகியே அருள் முத்துமாரியே
துக்க நிவாரணி துஷ்ட சங்காரி–சிவ
சக்தி மயமாகி உலகாளுந்தேவியே
மங்களம் பொங்குமெழில் பூரணியே - மகிமை
பொங்கிடக் கொடியேற்றம் காண்பவளே
இங்கித சோபனம் விளங்கிடவே - அருள்
அம்மையே அற்புதம் ஓங்கிடவே.

அல்வாயூர் சி.சிவனேசன்

## பயிற்சிப் பட்டறை

சொன்ட் நிறுவன அனுசரணையுடன் கரவெட்டி பிர தேச செயலர் பிரிவில் கடந்த காலங்களில் நியாப், நிக்கோட் போன்ற நிறுவனங்களினால் வழங்கப்பட்ட நிதியினை சுய தொழில் முயற்சிக்கான சுழற்சி முறை கடனாக வழங்கிவரும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கான இரண்டு நாள் பயிற்சி பட்டறை எதிர்வரும் 24, 25 ஆம் திகதிகளில் கரவெட்டி பிரதேச செயலகத்தில் நடத்துவதற்கான ஏற்பாட்டினை வடமராட்சி தெற்கு, மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசம் செய்துள்ளதாக பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (ஓ)


## சுவாமி விவேகானந்தரின் எல்லாவற்றிலும் இறைவனைக் காணலாம்



நாம் செய்யாமல் இருந்திருக்கக் கூடாதா என்று பின்னால்நாம் வருத்தப்படும் பல நூறு காரியங்களைச் செய்து விடுகிறோம். ஆனால் அந்தக் காரியங்கள் நமக்கு எத்தனை உயர்ந்த பாடங்களை கற்பிக்கின்றன.

என்னைப் பொறுத்தவரையில் நான் சில நல்ல காரியங்களைச் செய்திருக்கிறேன் என்பதில் மகிழ்கிறேன். பலதீய காரியங்களைச் செய்திருக்கிறேன் என்பதிலும் மகிழ்கிறேன். சில காரியங்களைச் சரியாகச் செய்ததற்காக மகிழ்கிறேன். அதேவேளையில் பல தவறுகள் செய்ததற்காகவும் மகிழ்கிறேன். ஏனென்றால், என் தவறு ஒவ்வொன்றும் ஓர் உயர்ந்த பாடத்தை எனக்கு கற்பித்திருக்கிறது. நான் இதுவரை செய்த செயல்கள், எனது எண்ணங்கள் அனைத்தின் பலனே இப்போதைய நான். எனது ஒவ்வொரு செயலும் ஒவ்வோர் எண்ணமும் அவற்றின் பலனைத் தந்திருக்கின்றன. இந்தப் பலன்கள் அனைத்திற்கும் ஒட்டுமொத்தமே என் முன்னேற்றமாக அமைந்தது.

# முகாம்களில் அடைக்கப்பட்டிருக்கும் 3 இலட்சம் மக்களை வாழ்விடங்களில் வாழ அனுமதிக்கக் கோரி ஆர்ப்பாட்டம்



இலங்கையின் வடபுலத்தில் அகதிகளாக அரச தடுப்பு முகாம் களில் முட்கம்பி வேலியினுள் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் மூன்று இலட்சம் தமிழ் மக்களை அவர்களது வாழ்விடங்களில் வாழ அனுமதிக்க வேண்டி சென்னையில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடை பெறவுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

சென்னை அரும்பாக்கத்தில் இலங்கை தமிழர் பாதுகாப்பு இயக்கத்தினால் ஈழத்தமிழர்களின் விடுதலைக்கான அடுத்த கட்டப் போராட்ட நடவடிக்கைகள் குறித்து ஆலோசிப்பதற்காகக் கூட்டப்பட்ட கூட்டத்திலேயே இம் முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது. இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பழ.நெடுமாறன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் மதிமுக பொதுச் செயலாளர் வைகோ, பாமகதலைவர் ஜி.கே. மணி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர் சி.மகேந்திரன், தேசிய வாத காங்கிரஸ் மாநில தலைவர் திண்டிவனம் இராமமூர்த்தி, இலங்கை எம்.பி சிவாஜிலிங்கம் உட்பட தமிழகத்தில் உள்ள பல்வேறு அமைப்புக்களின் தலைவர்களும் முக்கிய பிரதிநிதிகளும் கலந்து கொண்டதாகத் தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் கடந்த ஆறு மாத காலத்தில் ஒரு இலட்சம் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். அங்கு நடைபெற்று வரும் போரை நிறுத்த ஐக்கிய நாடுகள் சபை உட்பட உலக நாடுகள் தவறிவிட்டன என கூட்டத்தில் பேசிய பழ. நெடுமாறன் குறிப்பிட்டார். அவர் மேலும்தெரிவிக்கையில்,

தற்போது மூன்று இலட்சம் தமிழர்கள் மின்வேலி கொண்டு அமைக்கப்பட்ட அகதிகள் முகாம்களில் உணவு, மருந்து, குடிநீர் இன்றி தவித்து வருகின்றனர். அதில்தினசரி 200 பேர் பரிதாபகரமாக இறந்து வருவதாகவும் குறிப்பிட்டார். இவர்கள் அனைவரையும் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு தமிழ் மக்களையே சாரும். அதற்காக நாம் தமிழகக் கிராம மக்கள் அனைவரையும் ஒன்றுதிரட்டி போராட்டம் நடத்த வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

தொடர்ந்து நடைபெற்ற இக் கூட்டத்தில் இலங்கையில் மின்வேலி தடுப்பு முகாம்களில் அவதியுறும் மூன்று இலட்சம் தமிழர்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி சென்னையில் இம்மாதம் 24 ஆம் திகதி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்நடாத்துவது.

ஆகஸ்ட் 20 ஆம் திகதி சென்னையில் மக்கள் திரள் பொதுக் கூட்டம் நடத்தி ஈழத் தமிழர் வாழ்வுரிமைக்கான உலகத் தமிழர் பிரகடனத்தை வெளியிடுவது.

25 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ்நாட்டு அகதிகள் முகாம்களில் உள்ள ஈழத்தமிழர்களை இலங்கை தமிழர் பிரச்சினையில் முழுமையான அரசியல் தீர்வு கண்டபிறகே திருப்பி அனுப்ப வேண்டும் என்பதை வலியுறுத்துவது.

ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக செயற்படுபவர்கள் மீது பொய் வழக்குகளை போட்டு கைது செய்வதை இலங்கை தமிழர் பாதுகாப்பு இயக்கம் வன்மையாக கண்டிக்கிறது.

ஆகிய தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டதாக அறியவருகிறது. (ஓ-4)

## மும்பைத் தீவிரவாத தாக்குதல் வழக்கில் திடீர் திருப்பம்

மும்பை தீவிரவாத தாக்குதல் வழக்கில் திடீர் திருப்பமாக சம்பவத்துடன் தொடர்புடையவராக கைதாகி தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த அஜ்மல் அமீர் கசாப் அவர் மீது சுமத்தப்பட்டிருந்த குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளார்.

மேலும் என்ன நடந்தது என்பதையும் எப்படியெல்லாம் இந்த தாக்குதலுக்கான திட்டம் தீட்டப் பட்டது என்ற முழு விபரத்தையும் நீதி மன்றில் அவர் வெளியிட்டுள்ளார்.

கடந்த ஆண்டு நவம்பர் 26ஆம் திகதி அன்று மும்பாயில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதல் சம்பவம் தொடர்பில் தீவிரவாதி கசாப் மட்டுமே உயிருடன் கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-4)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில் 25 ♦ 05 ♦ 1931



அரண் திருவடியில் 23 ♦ 06 ♦ 2009

அமரர்

## தம்பையா சிதம்பரப்பிள்ளை

(ஓய்வு பெற்ற கணித ஆசானும், முன்னாள் கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்கத் தலைவரும்)

நல்லாசிரியனான மனிதன் நீ
கூட்டுறவாலு யர்ந்த அமலன் நீ
நூலகத்தால் புகழடைந்த நூலகம் நீ
கூடும் மனதினர்க்குப் புனிதன் நீ

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

முகுந்தன் குடும்பம்,
கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

(சி/28801)



# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தாயின் மடியில் 13 ♦ 10 ♦ 1984



விதியின் சதியில் 22 ♦ 06 ♦ 2009

அமரர்

## மகேந்திரன் -சசீந்திரன்

உயிர் காப்பான் தோழனென மூதுரை சொல்லும் –தோழன்
உயிர் காக்க நீ முனைந்து உனையே ஈந்தாய்
பயிராக அசைந்தாடி பலன்தரும் வேளை –அந்தோ
படுபாதகர் உனைப் பொசுக்கி எரித்து விட்டாரே
செயல் வீரா ! செகத்தினிலே இனிமேல் –உனது
சிரித்தமுகம் நிமிர்ந்த நடை காண்பது எப்போ?
வியந்து நின்றோம் சசீந்திரா ! உன் ஆண்மை கண்டு– இப்போ
விம்புகின்றோம் விசும்புகின்றோம் உன்னை இழந்து.

31 ,கே.கே.எஸ்.வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில் (இ/27)

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.


# இலங்கை அகதிகளுக்கு நிபந்தனையின்றி வேலை வழங்கலாம்

## எஸ்.பி.சாரங்கன் தெரிவிப்பு

திருவள்ளுவர் மாவட்டத்தில் உள்ள பூந்தமல்லி கும்மிடிப்பூண்டி அகதிகள் முகாம்களில் வசிப்பவர்களை எவ்வித நிபந்தனையும் இன்றி பணிகளுக்கு ஆட்தேர்வு செய்யலாம் என தொழிற்சாலை நிர்வாகத்தினருடன் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் எஸ்பி.சாரங்கன் கூறினார்.

திருவள்ளுவர் மாவட்டத்தில் உள்ள தொழிற்சாலை நிர்வாகத்தினர் மற்றும் மாவட்ட பொலிஸ் அதிகாரிகளுடனான ஆலோசனைக் கூட்டம் சனிக்கிழமை எஸ்பி அலுவலக வளாகத்தில் நடந்தது.

இதில் மப்பேடு காக்களூர் சிப்காட் பகுதிகளில் உள்ள 52 தொழிற்சாலையின் நிர்வாகத்தினர் கலந்து கொண்டனர்.

இதில் தொழிற்சாலையின் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து விவாதிக்கப்பட்டது. இதையடுத்து இரவு நேரங்களில் தொழிற் சாலைப் பகுதிகளில் காவலாளி களை தாக்கிவிட்டு கொள்ளையடிக்கும் மர்மக்கும்பலை பிடிக்க தனிப் படையும் இரவு நேர ரோந்துப் பணியும் தீவிரப் படுத்தப் படும் என எஸ்பி சாரங்கன் கூறினார்.

மேலும் தொழிற்சாலை நிர்வாகத்தினர் இம் மாவட்டத்தில் உள்ள முகாம்களில் இருக்கும் அகதிகளுக்கு வேலை வாய்ப்பு கொடுக் கலாமா? எனக் கேட்டனர்.

அதற்கு கடவுச் சீட்டு, குடும்ப அட்டை முறையாக உள்ள அகதிகளுக்கு எவ்வித நிபந்தனையும் இன்றி வேலை வாய்ப்பு அளிக்கலாம் என எஸ்பி சாரங்கன் கூறினார். (ஓ-4)


# மரண அறிவித்தல்

## Dr. வல்லிபுரம் செல்லத்துரை

கும்பிளாவளைப் பிள்ளையார் கோயிலடி , அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் இராமநாதன் வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட Dr.வல்லிபுரம் செல்லத்துரை (20.07.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் ரஞ்சிதராணியின் (கனடா), அன்புக்கணவரும் குகன் (கனடா), அனுசியா (கனடா), கணேசன் (யாழ்ப்பாணம்) , மல்லிகா (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 10 மணிக்கு இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார் ,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராமநாதன் வீதி,
நாச்சிமார் கோவியிலடி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 6343

தகவல்
கணேசன் (மகன்)

(சி/2881)


# இளமைக் காலம் முதல் இராமாயணத்தை விமர்சித்து வரும் நான் தொடர்ந்தும் விமர்சித்துக் கொண்டே இருப்பேன்

## கலைஞர் கருணாநிதி தெரிவிப்பு

(சென்னை)

இராமாயணத்தை இளமைக் காலம் முதல் இன்று வரையில் விமர்சித்துக் கொண்டிருக்கும் நான் இனியும் விமர்சிக்க விருப்பவன் என தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

மத்திய சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சர் வீரப்பமொய்லி இராமாயணம் குறித்த கன்னட நூல் ஒன்றை ஸ்ரீ இராமாயணப் பெருந் தேடல் என்ற பெயரில் தமிழாக்கம் செய்துள்ளார். இதன் முதல்பாகம் வெளியீட்டு விழா கடந்த ஞாயிற்றுக் கிழமை சென்னை கலை வாணர் அரங்கில் நடைபெற்றது. விழாவுக்கு முதல் அமைச்சர் கருணாநிதி தலைமை தாங்கி முதல் புத்தகத்தை வெளியிட அதனை மத்திய கப்பல் போக்குவரத்து துறை அமைச்சர் ஜி.கே. வாசன் பெற்றுக் கொண்டார்.

விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே முதலமைச்சர் கருணாநிதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறிகையில்,

இராமாயண நூல் வெளியீடா? அதிலே கருணாநிதி பங்கேற்பதா? என்றுபலர் ஆச்சரியப்பட்டிருப்பீர்கள். ஆமாம். இராமாயணநூல்வெளியீடுதான் அதில் கருணாநிதி பங்





கேற்றது மாத்திரமல்ல அதை வெளியிட்டும் உரையாற்றியிருக்கிறார் என்பதுதான் இன்றைய செய்தி. இதில் ஒன்றும் முரண்பாடில்லை.

இராமாயணத்தை இளமைக் காலம் முதல் இன்று வரை விமர்சித்துக் கொண்டிருப்பவன் நான். பெரியாரின் கொள்கைகளை உள் ளத்திலேயே பதிய வைத்துக் கொண்டு அண்ணாவின் கருத்துக்களை இதயத்திலே பதிய வைத்து இராமாயணத்தை இதுவரையில் விமர்சித்துக் கொண்டிருந்தவன் இனியும் விமர்சிக்க விரும்புபவன்.


வீரப்ப மொய்லியின் சிந்தனைகள் இந்த நூலில் எப்படி இழையோடி புரட்சி எரிமலை யாக வெடித்துச் சிதறியிருக்கின்றன என் பதை அவரை இயற்றி மொழி பெயர்க்கப் பட்ட பல பாடல்களின் வழியாக என்னால் உணர முடிகிறது.

தனது கவிதை வாயிலாக பொதுவுடமை தத்துவங் களை ஏழைகளின்வாழ் விலே ஏற்படுகின்ற இன்னல் களை அநியாயத்தை வீரப்ப மொய்லி இதிலே கண்டித்திருக்கிறார்.

அகலிகையை குற்ற மற்றவள் என்று தனது கவிதையில் குறிப்பிட்டு வாதமும் எதிர் வாதமும் நடத்தியுள்ளார் வீரப்ப மொய்லி. பெண்மைக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளில் இதுவும் ஒன்று என்பதை எடுத்துக் காட்டுகிறார்.

என்னுடைய பால பருவத்தில் நான் தீவிரமான பகுத்தறிவுவாதி. இப்போது இல்லை என்று அர்த்தமல்ல. அது தொடர்ந்து கொண்டே இருக்கும். இளமையில் பகுத் தறிவு வாதியாக இருந்த நான் ஞானப் பழம் என்று என்னாலேயே வர்ணிக்கப்பட்ட திரு முருக கிருபானந்த வாரியாரிடத்தில் வாதிட்டிருக்கிறேன். பல இடங்களில் சிலைகளைத் திறந்து வைத்து அவ ரது புகழ் பாடியவன் தான் நான்.

அமைச்சர் வீரப்ப மொய்லி இந் நூலில் எரிமலை போன்று பெண்ணுரிமைகளை நிலை நாட்டுகின்ற கருத்துக்களை ஏழை எளிய மக்களுடைய வாழ்வில் இருக்கின்ற கஷ்டங்களை வர்ணித்திருக்கின்ற கருத்துகளை பாராட்டுகிறேன் என்றார். (ஓ-4)








மூலதனச் சந்தையின் தகவல் நிலையம் நேற்று யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகத்தில் திறந்து வைக்கப்பட்டது. நிகழ்வின் ஆரம்பத்தில் மங்கல விளக்கு ஏற்றப்படுவதையும் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், பிணைகள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் காப்புறுதித் தலைவர் உதயசிறி காரியவாசம் ஆகியோர் இணைந்து நிலையத்தை திறந்து வைப்பதையும் துணை வேந்தரிடம் புத்தகம் கையளிக்கப்படுவதையும் படங்களில் காணலாம். (படம்:- சுதாகர்)

# கனேரியா மிரட்டல்; இலங்கை பணிந்தது

# பாகிஸ்தான் அணி முன்னிலையில்

(கொழும்பு)

டனேஸ் கனேரியாவின் சிறப்பான பந்துவீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 233 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி 3 டெஸ்ட், 5 ஒருநாள் போட்டிகள் மற்றும் ஒரேஒரு இருபது-20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலிரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் வெற்றிபெற்ற இலங்கை அணி தொடரை 2:0 என்ற கணக்கில் தனதாக்கியது.

இந்நிலையில் மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் நேற்று முன்தினம் கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி நேற்றைய முதல்நாள் ஆட்ட நேர முடிவில் அதன் முதலா வது இன்னிங்ஸில் 7 விக்கெட்டுக்களை யிழந்து 289 ஓட்டங்களை எடுத்திருந்தது.



இந் நிலையில் இரண்டாம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி முதல் இன்னிங்ஸில் 299 ஓட்டங்களைஎடுத்து சகலவிக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் குர்ரான் மன்சூர் 93 ஓட்டங்களையும் மொகமெட் யூசுப் 90 ஓட்டங்களையும் சொகைப் மலிக் 45 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் திலான் துஷார 5 விக்கெட்டுக்களையும் நுவான் குலசேகர 3 விக்கெட்டுக்களையும் சமிந்த வாஸ் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சியளித்தது.

ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களான வர்ணபுர பூச்சியத்துடன் முதலாவது பந்திலும் பரணவித்தான 5 ஓட்டங்களுடனும் அடுத்தடுத்து ஆட்டமிழக்க இலங்கை அணி 23 ஓட்டங்களை எடுத்து 2 ஆவது விக்கெட்டையும் இழந்தனர்.

இந்நிலையில் மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த அணித் தலைவர் சங்கக்கார,மஹேல ஜெயவர்த்தனா ஜோடி சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்கியது.

இந்த ஜோடி இணைப்பாட்டமாக 42 ஓட்டங்களை எடுக்க அணித் தலைவர் குமார் சங்கக்கார 45 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய சமரவீர 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இலங்கை அணி 82 ஓட்டங்களை எடுத்து 4ஆவது விக்கெட்டை இழந்தது.

தொடர்ந்து மத்யூஸ் களமிறங்கி நிதானமாகத்துடுப்பெடுத்தாட இலங்கைஅணி100ஓட்டங்களைத்தொட்டது.

இதில் மஹேல ஜெயவர்த்தனா 100ஆவது பந்தில் தனது அரைச் சதத்தை பூர்த்தி செய்ய இலங்கை அணி 150 ஓட்டங்களைக் கடந்தது.

மறுமுனையில் மத்யூஸ் 31 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய சமிந்த வாஸ் 4ஓட்டங்களுடன்ஆட்டமிழந்தார்.

அடுத்து திலகரட்ண டில்சான் களமிறங்க மறுமுனையில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய மஹேல ஜெயவர்த்தனா 79 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இலங்கை அணி 174 ஓட்டங்களை எடுத்து 7ஆவது விக்கெட்டை இழந்தது.

தொடர்ந்து களமிறங்கிய குலசேகர, ஹேரத் சோபிக்காத நிலையிலும் தலையில் பந்துபட்டு காயத்திலும் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி 44 ஓட்டங்களை எடுக்க இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 233 ஓட்டங்களை எடுத்தது.

இதில் திலகரட்ண டில்சான் 66 பந்துகளில் (2 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 44 ஓட்டங்களை எடுத்தார்.

பந்து வீச்சில் டனேஸ் கனேரியா 5 விக்கெட்டுக்களையும் சயிட் அஜ்மல் 3 விக்கெட்டுக்களையும் உமர் குல், யூனிஸ்கான் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து முதலாவது இன்னிங்ஸில் 66 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலை யிலிருந்தபாகிஸ்தான் அணி இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் ஒரு விக்கெட்டை இழந்து 16 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதில் பவாட் அலாம் 14 ஓட்டங்களையும் அணித்தலைவர் யூனிஸ்கான் தனது கணக்கை ஆரம்பிக்காமலும் ஆட்டமிழக்காமல் களத்திலிருந்ததுடன் மன்சூர் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

பந்துவீச்சில் ஹேரத் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார். மூன்றாம் நாள் ஆட்டம் இன்றாகும்.

# நடுவர்களின் தவறான தீர்ப்புகளால் பற்றி எரிகிறது ஆஸி. ஊடகங்கள்

(சிட்னி)

அவுஸ்திரேலிய வீரர்களுக்கு கொடுக்கப்படும் தவறான தீர்ப்புகள் குறித்து அவுஸ்திரேலிய ஊடகங்கள் கடும் கோபத்தில் உள்ளன. இங்கு இதுதான் இப்போது பற்றி எரியும்பிரச்சினையாகவுள்ளது. இங்கிலாந்து சென்றுள்ள அவுஸ்திரேலிய அணி 5 போட்டிகள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடரில் பங்கேற்று வருகிறது. முதல் டெஸ்ட் சமனிலை யில் முடிந்தது.

இரண்டாவது, டெஸ்டில் இரண்டாவது இன்னிங்ஸில் இக்கட்டான நிலையில் களம் இறங்கிய அவுஸ்திரேலிய அணிக்கு இங்கிலாந்து பந்துவீச்சாளர்களைவிட நடுவர்கள் பில்லி டாக்ட்ரோவ் (மேற்கிந்தியத்தீவுகள்) மற்றும் ருடி கேயர்ட்சனை (தென்னாபிரிக்கர்) சமாளிப்பதுதான் பெரும்பாடாக இருந்தது.

**சர்ச்சைக்குரிய ஆட்டமிழப்புகள்**

பிளின்டொப் வீசிய நோபோலில் பீட்டர்சனிடம் பிடிகொடுத்தார் கடிச். ஆனால் டாக்ட்ரோவ் கவனிக்கவில்லை. ஹயூரிஸ் அடித்த பந்தை ஸ்ரொரஸ் தரையில் பட்டு பிடித்தார். ஆனால் கேயர்ட்சன் மூன்றாவது நடுவரிடம் கேட்காமல் ஆட்டமிழப்பு கொடுத்தார். சுவான் வீசிய பந்தை ஹசி தரையில் அடித்த நிலையில் டாக்ட்ரோவ் ஆட்டமிழப்புக் கொடுத்து வெளியேற்றினார்.

**ஏமாற்று வேலை**

இது குறித்த அவுஸ்திரேலியாவிலிருந்து வெளியாகும் தி டெய்லி டெலிகிராப்ஸ் பத்திரிகையில்; இதே போட்டியில் ஹரிட்ஜ் பிடித்த பிடி குறித்து மூன்றாவது நடுவரிடம் முறையிட்ட நடுவர்கள், ஹயூரிஸ் சந்தேகத்திற்கு ஏன் மூன்றாவது நடுவரிடம் முறையிட வில்லை. இது முழு ஏமாற்று வேலை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தி டெலிகிராப் பத்திரிகையில் நோபோலில் கடிச் ஆட்டமிழப்பு மற்றும் ஹசிக்கு தவறாக தீர்ப்பு வழங்கிய நடுவர் டாக்ட் ரோவை மறக்கவே முடியாது. ஸ்ரொரஸ்பிடி குறித்து மூன்றாவதுநடுவரிடம் முறையிபாத கேயர்ட்சனுக்கு மன்னிப்பே கிடையாது.

இதனால் தொடரின் முடிபே மாறுவதற்கு வாய்ப்புள்ளது. என தெரிவிக்கப்பட்டுள்ளது இதேபோல தி அவுஸ்திரேலியன்ஸ், சிட்னி மோர்னிங் ஹெறால்ட் போன்ற பத்திரிகைகளும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

# ஆஸி. லெவின் அணியில் பொன்டிங் 12ஆவது வீரர்

(மெல்போர்ன்)


அவுஸ்திரேலிய அணிக்காக இதுவரை சிறப்பாக விளையாடிய வீரர்களை உள்ளடக்கிய அவுஸ்திரேலிய லெவின் அணியை கிரிக் இன்போ வெப்சைட் தேர்வு செய்துள்ளது.

இதில் அவுஸ்திரேலிய அணியின் தற்போதைய அணித்தலைவர் ரிக்கி பொன்டிங்கிற்கு 12 ஆவது இடம் கிடைத்துள்ளது.

ஷேன் வோர்ன், கில்கிறிஸ்ட், மக்ராத் ஆகியோரும் இப்பட்டியலில் இடம் பிடித்துள்ளனர்.

அவுஸ்திரேலிய லெவன் அணி வீரர்கள்;

விக்டர் ட்ரம்பர், ஆர்தர் மோரிஸ், டொன் பிரட்மன், கிரேக் சப்பல்,



அலன் போர்டர், கெய்த் மில்லர், அடம் கில்கிறிஸ்ட், ஷேன் வோர்ன், பில் ஓ ரெய்லி, டென்னிஸ் லில்லி மற்றும் மக்ராத், 12ஆவது வீரர் ரிக்கி பொன்டிங்.

# ஈழம் வங்கியின் தலைவர் கொழும்பில் வைத்து கைது

## பொலிஸார் தகவல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளால் நடத்தப்பட்ட ஈழம் வங்கியின் தலைவர் எனக் கூறப்படும் ஒருவரை கொழும்பில் தாம் கைது செய்திருப்பதாக பொலிஸார் நேற்று அறிவித்துள்ளனர்.

கொலின் ரூபன் எனப்படும் இவர் கொழும்பில் உள்ள தங்குவிடுதி ஒன்றில் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலனாய்வுத் துறையினருக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்து கொழும்பில் உள்ள தங்கு விடுதி ஒன்றை திடீரென சுற்றிவளைத்து தேடுதல் நடத்திய பொலிஸார் குறிப்பிட்ட நபரை கைது செய்ததாக பொலிஸ் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள புதுக்குடியிருப்பை சேர்ந்த கொலின் ரூபன் வன்னிப் போர் உச்சக் கட்டத்தையடைந்த போது படையினரிடம் சரணடைந்து வவுனியா மாவட்டத்தில் உள்ள செட்டிக்குளம் முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

(ச-5)

# வவுனியாவிலிருந்து சென்ற பலர் மதவாச்சியில் கைது

## மனித உரிமை ஆணையகம் தகவல்

(வவுனியா)

வவுனியாவிலிருந்து கொழும்புக்கு வரும் பயணிகள் மதவாச்சி சோதனைச் சாவடியில் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்படுவதுடன் பலர் கைது செய்யப்படுவதாகவும் உறவினர்கள் முறையிட்டுள்ளனர்.

விசாரணைக்கு உட்படுத்தப்படும் இளைஞர்கள், யுவதிகள் பலர் இரகசியப் பொலிஸாரினால் விசாரணைக்கு. உள்ளாக்கப்படுகின்றனர் என தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பிட்ட சில நாட்களில் மட்டும் 10 இளைஞர்கள் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளையில் மதவாச்சி சோதனைச் சாவடியில் இருந்து கடந்த 2 நாட்களில் மூன்று இளைஞர்கள் காணாமல் போயுள்ளதாக முறைப்பாடுகள் பதிவாகியுள்ளது என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

(ச-5)

# கியூபா நிபுணர் குழு டெங்கு குறித்து ஆராய்வு

(கொழும்பு)

இலங்கை வந்துள்ள கியூபா நிபுணர்கள் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக ஆராயவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

டெங்கு நோய்த் தொற்றை கட்டுப்படுத்தும் செயற்றிட்டம் குறித்து விளக்கமளிக்கும் நோக்கில் கியூபாவைச் சேர்ந்த வைத்திய நிபுணர்கள் இருவர் நேற்றுக்காலை இலங்கைக்கான விஜயம் மேற்கொண்டு வந்தடைந்தனர்.

இதேவேளை டெங்கு நோய் காரணமாக 190 பேர் பலியாகியுள்ளதோடு 18 ஆயிரத்து 300 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச-14)

## யாழ்ப்பாணத்...

இரகசியத் தகவல் ஒன்றினை அடுத்தே இந்த ஐந்து இளைஞர்களும் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக் கப்படுகிறது.

வெளிமாவட்டத்தைச் சேர்ந்த பொலிஸாரே தேடுதல் நடத்தி இவர்களை கைது செய்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்புக்கு வந்தமைக்கான காரணங்கள் மற்றும் பதிவுகள் உட்பட அனைத்து ஆவணங்களும் கைது செய்யப்பட்ட இளைஞர்களிடம் இருந்தும், அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக உறவினர்கள் கூறுகின்றனர்.

(ச-5)

## யாழ்.போதனா...

வைத்தியசாலையில் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுவதை நேரில் சென்று நான் அறிந்துள்ளேன்.

அங்கு பல அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்படவிருப்பதுடன் மருந்து வகைகளுக்கும் தட்டுப்பாடு காணப்படுகிறது. எனவே யாழ்.போதனா வைத்தியசாலையில் நவீன மருத்துவ உபகரணங்கள் நிறுவப்படுவதுடன் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பது தொடர்பில் விரைவில் சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவை யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வரவுள்ளதாகக் கூறினார்.

(ச-5)

## யாழ்-கொழு...

யாழ்.-கொழும்பு இருவழி விமானக் கட்டணம் 21 ஆயிரம் ரூபாயிலிருந்து 19 ஆயிரத்து 500 ரூபாயாக குறைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வயது குறைந்தவர்களுக்கான ஒரு வழி விமானக் கட்டணம் 7 ஆயிரம் ரூபாயிலிருந்து 6 ஆயிரத்து 500 ரூபாயாகவும் இரு வழிக்கட்டணம் 14 ஆயிரம் ரூபாயிலிருந்து 13ஆயிரம் ரூபாயாகவும் குறைக்கப்பட்டுள்ளதாக விமான சேவைகள் கப்பல் துறை அமைச்சு அறிவித்துள்ளது.

(ச-5)

## பசில் எம்.பியின்...

உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் என். இராசநாயகம், சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.ரவீந்திரன், உள்ளூராட்சி ஆணையாளர் எஸ்.ஜோன்சன், யாழ்.மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரட்ணம், கல்விப்பணிப்பாளர்கள், பிரதேச செயலாளர்கள் உட்பட திணைக்களத் தலைவர்கள் கலந்து கொள்வர்.

இக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் வடக்கு மாகாண சபை நிர்வாகத்தினர் நேற்று ஏ-9 வீதியூடாக யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ளனர்.

(ச-5)

## தீவுப் பகுதிக்...

கரையொதுங்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். மேற்படி 4 சடலங்களும் அடையாளம் காணப்படவில்லை.

இது தொடர்பாக இந்திய உயர்ஸ்தானிகராலயம், இந்திய மீனவர் சங்கம் மற்றும் யாழ்.மீனவர் சம்மேளனத்திற்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை நீதவான் ஜோய் மகாதேவன் நேரில் சென்று விசாரணை நடத்தியதுடன் பிரேத பரிசோதனைக்காக சடலங்களை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

(ச-5)

## இலங்கைக்கு கடனுதவி...

இலங்கை வந்துள்ள சர்வதேச நாணய நிதியப் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையினை அடுத்து இணக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் 2.5 பில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவியை இலங்கைக்கு வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியம் இணங்கியுள்ளது.

அரசியல் செலவினங்களைக் குறைத்தல்,வரவு செலவு திட்ட பற்றாக்குறையைக் குறைத்தல், இலங்கை ரூபாயின் பெறுமதியை உயர்த்தாது அதனை சந்தை நிலைவரப்படி தளர்த்துதல் உள்ளிட்ட பொதுவான நிபந்தனைகளோடு மேலும் சில முக்கிய நிபந்தனைகளின் அடிப்படையிலேயே இலங்கை அரசிற்கான இந் நிதியுதவியினை வழங்க ஐ.எம்.எப். இணங்கியுள்ளதாக கூறப்படுகிறது.

எனினும் இலங்கை அரசு இது விடயம் தொடர்பான தகவல்கள் வெளியே தெரிந்து விடாமல் பார்த்துக் கொள்வதில் முனைப்புடன் செயற்படுவதாக கூறப்பட்டுள்ளது.

இதேவேளை சர்வதேச நாணய நிதியம் கொடுக்கும் நிதியினைக் கொண்டு போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் மேம்பாடு மற்றும் அவர்களின் பிரதேசங்களின் மீள் கட்டமைப்பு போன்ற பணிகளுக்கு இந்நிதியைப் பயன்படுத்த முடியாது எனவும் அந்நியச் செலாவணிப் பற்றாக்குறையினால் பாதிப்புற்ற இலங்கையின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காகவே இந் நிதி பயன்படுத்தப்படவேண்டும் எனவும் கூறப்படுகிறது.

இருந்தபோதும் மறைமுகமான அடிப்படையில் சில நன்மைகள் ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச-14)

## ஏ-9 பாதையின்...

இது தொடர்பில் சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலம்புரிக்கு தெரிவித்ததாவது, யாழ்ப்பாணத்திலிருந்து வட பிராந்திய போக்குவரத்து சபையின் 5 பஸ்கள் இன்று ஏ-9 பாதையூடாக கொழும்புக்கு புறப்படும். இன்று கப்பல் மூலம் அழைத்துச் செல்லப்படவிருந்த பயணிகள் ஏ-9 பாதையூடாக பஸ்களில் தமது பயணத்தை மேற்கொள்வர்.

கொழும்பு செல்லும் பஸ்களில், யாழ்ப்பாணத்திற்கு திரும்பும் போது கொழும்பிலிருந்து வரும் பயணிகள் நாளை அழைத்துவரப்படுவர்.

அத்துடன் அடுத்து சில தினங்களில் கொழும்பு யாழ்ப்பாணத்திற்கிடையிலான சொகுசு பஸ் சேவையும் ஆரம்பிக்கப்படும்.

தற்போது நடைமுறையிலுள்ள பயணப் பாதுகாப்பு அனுமதி (கிளியரன்ஸ்) பெறும் நடைமுறை விரைவில் நீக்கப்படும். இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சுடன் கலந்துரையாடி வருகின்றேன் என்றார்.

இதேவேளை யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இன்று காலை 10 மணிக்கு ஆரம்பமாகும் முதலாவது பஸ்சேவையை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆரம்பித்து வைப்பதுடன் நிகழ்வில் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பசில் ராஜபக்ஷவும் கலந்து கொள்வார்.

இதேவேளை யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படும் 5 பஸ்களும் மதவாச்சி வரை செல்லும் எனவும் அங்கு பயணிகள் சோதனையிடப்பட்ட பின்னர் சொகுசு பஸ்களில் கொழும்புக்கு அழைத்துச்செல்லப்படுவர் என தெரிய வருகிறது.

(ச-5)


ICT/GIT
Gr 10, 11 & A/L
By Mr. S.Branavan
(B.A[Hons], MACS, Dip. in Comp.Sys.Design[NIBM])
Individual & Group Classes
Trusted Education with good Discipline
IECE 121/1, ARASADY ROAD, KANTHERMADAM
Phone : 021 222 7845

A/L வரலாறு -2009
மாபெரும் கருத்தரங்கு
DMI ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
23.07.2009
24.07.2009 } காலை 8.30 -மாலை 4.30 வரை
யாழின் முன்னணி வரலாற்றாசிரியர்களான
M.பத்மன், S.அஜிகரன், S.ப.தாஸ ஆகியோரின் கருத்துரைகள் இடம்பெறும்.
வெளிமாணவர்களும் பங்குபற்றலாம். (2996)

பொருளியல்
இறுதிக் கருத்தரங்கு
DMI JAFFNA
by:- S.S.SRI
(B.Com)
30, 31ம் திகதிகளில்
9.00 – 2.00 மணிவரை
(C-2887)

Information & Communication Technology
CERTIFICATE COURSES
MS Office, Visual Basic, C++, Photo Shop, Corel Draw, HTML, Java, Java Script, Macromedia Flash, Web Multimedia, Hardware Technology, Simply Accounting (ACCPACK) & All Certificate courses
By Miss.K.S.Jiny
Kids Programming for Gr 6, 7,8 & Gr9
Basic Computer Knowledge , MS Office, Paint, Visual Basic, Photo Shop, Corel Draw,
By Miss.K.S.Jiny
Individual & Group Classes (Fully Computerized Classrooms)
ICT & GIT (Gr 10,11 & A/L) By Mr. S. Branavan
IECE 121/1, ARASADY ROAD, KANTHERMADAM TP: 021-222 7845

யாழ்.மாவட்டத்தில் முதல் தடவையாக...
கணக்கியல் நிதித்துறையில் உள்ளூர், சர்வதேச மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட தகுதியை பெற்றிட
ACCA
(Association of Chartered Certified Accountants)
அனுமதிக்கான கல்வித் தகைமை:- G.C.E. (A/L) இரண்டுபாட சித்தி
கற்கை நெறிக்கான காலம்:- ஒரு வருடம்
பரீட்சைகள்:- BRITISH COUNCIL இன் அனுமதியுடன் யாழ்.மாவட்டத்தில் நடத்தப்படும்.
கற்கை நெறிகள் ஆரம்பம்:- 25.07.2009 சனி 10 A.m
இக் கற்கை நெறியை பூர்த்தி செய்த மாணவர்கள் UK சென்று மேல் படிப்பு படிக்க விரும்பின் அதற்கான ஒழுங்குகளை எமது தலைமைக் காரியாலயத்தினூடாக செய்து கொடுக்கப்படும்.
விபரங்களிற்கு:- Jaffna Technical Institute
No. 45, மணிக்கூட்டு வீதி யாழ்ப்பாணம்.
T.P:- 077 2719085, 0718561654 e.mail:- accajaffna@gmail.com
(C-2885)

நியூ சிற்றி ரேடர்ஸ்
சொனி, சொனிக்கா, பனசொனிக் றேடியோ, வோக்மன்,கார் றேடியோ, பனசொனிக், LG கலர்TV, CD பிளேயர்,சொனி, பனசொனிக் பைனியர் DVD பிளேயர்,DisTV, ரிசிவர், அன்ரனா வயர், பூஸ்ரர், கிறைண்டர்,றைஸ் குக்கர்,ரோஸ்ரர்,எலக்ரிக் கேற்றல், கொட் பிளேட்,அயன்,கீற்றர்,காஸ் குக்கர்,பிரசர் குக்கர் ,மண்ணெண்ணைய் குக்கர்,மேசை,சுவரை மின் விசிறிகள், சாச்சர் லைற், சார்ஜ் டோச் லைற், சகல விதமான வீட்டு வயரிங் மின்சாரப் பொருட்களையும் ,IC,ரான்சிஸ்ரர்,கொண்டஞ்சர் ஆகிய எலக்ரோனிக் உதிரிப்பாகங்களை மலிவு விலையில் பெற்றுக் கொள்ளவும், மேற்குறிப்பிட்ட பொருட்களை சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும் நாடுங்கள்.
T.P:- 021 222 3226
நியூ சிற்றி ரேடேர்ஸ்,
319 A, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
(இந்த ஸ்தாபனத்திற்கு யாழ்.நகரில் வேறு கிளைகள் இல்லை. இந்த ஸ்தாபனம் ஸ்ரான்லி வீதி, கே.கே.எஸ்.வீதிச் சந்தியில் இருந்து சத்திரச்சந்திப் பக்கமாக 6ஆவது கடை)
(C-2884)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.07.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.